பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 50 | நவம்பர் - 19-1968 | பக்கங்கள் 12 | விலை சதம் 15

**மா சே - துங் சிந்தனை**

இன்றைய நிலைமைகளில் திரிபுவாதம் என்பது வரட்டுத் தத்துவ வாதத்திலும் பார்க்க ஆபத்தானது. இன்று சிந்தாந்தத் துறையில் நமது முக்கியமான கடமைகளில் ஒன்று திரிபுவாதத்திற்கு எதிரான விமர்சனத்தை மலரச் செய்வதாகும்.

# ஒன்றுபடுவீர்! போராடத் துணிவீர்!

**அரசாங்க ஊழியர் நடத்த இருக்கும் வேலைநிறுத்தத்தை ஒட்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும் கூட்டாக பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளன.**

அண்மையில் நடைபெற்ற துறைமுக வேலை நிறுத்தங்கள், பல இ. போ. ச. டிப்போக்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பெருமளவு தோன்றியுள்ள மாணவர்களின் கிளர்ச்சிகள், இம்மாத முடிவில் வேலை நிறுத்தம் செய்வதற்காக அரசாங்க ஊழியர்கள் செய்து வரும் தயாரிப்புகள் ஆகியன, எமது நாட்டுத் தொழிலாளி வர்க்கமும், வாலிபர்களும் போராட்ட உணர்வுடன் புத்துயிர் பெற்றுள்ளனர்; விழிப்புணர்ச்சி அடைந்துள்ளனர் என்பதற்கு அறிகுறிகளாக உள்ளன. தொழிலாளர்களும், வாலிபர்களும், பிற்போக்கு அரசாங்கம் தம்மைப் பழி வாங்கி விடும் என்ற பயத்திலிருந்து விடுபட்டு துணிந்து போராட முன் வருகின்றனர் என்பதை இச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இச் சம்பவங்கள், துரதிர்ஷ்ட வசமாக சரியான தலைமையின்றி-அணி திரட்டலோ, ஒற்றுமையோ இன்றி இயல்பாக வளர்ந்து வருவதனால், தொழிலாளிவர்க்கமும் புரட்சிகர சக்திகளும் இக் குறைபாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்காவிடில் மறுபடியும் இவ் எழுச்சி சிதறுண்டு போகக் கூடும்.

## நாம் அறைகூவினோம்

சென்ற வருடம் நடைபெற்ற மாணவர்களின் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் எமது மனதை விட்டகலவில்லை. மாணவர்கள் பெரும் போராட்ட உணர்வு கொண்டிருந்த போதிலும் ஒற்றுமையின்மையால், கூட்டு முயற்சியும் சரியான தலைமையும் இல்லாததால் அவர்களின் போராட்டங்கள் சிதறுண்டு போயின. அதே போன்ற அபாயம் இன்றைய எழுச்சியையும் எதிர் நோக்குகின்றது.

சென்ற வருடம் தனியார் துறை தொழிலாளர் மத்தியில் வேலை நிறுத்த இயக்கம் வளர்ச்சியடைந்த போது அச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப் படுத்தி, தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றுபட்ட போராட்டம் நடத்த முன் வருமாறு சகல பிரதான தொழிற் சங்க மத்திய ஸ்தானங்களையும் நாம் அறைகூவி அழைத்தோம். எமது அறைகூவல் செவிடன் காதில் விழுந்ததுபோலாயிற்று அதன் காரணமாக தனியார் துறையில் ஒருபகுதி தொழிலாளர் மட்டுமே வேலை நிறுத்தத்தில் பங்குபற்றினர். இந்த வேலைநிறுத்தத்தைக் கூட சமசமாஜத் தலைவர்களும், கொ[illegible]மன் திரிபுவாதக் கும்பலும் [illegible] மாதத்திற்குள் தொழில் அமைச்சருடன் இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் காட்டிக்கொடுத்தனர்.

## ஒன்றுபட்ட தலைமை இல்லை

இன்று, அரசாங்க ஊழியர்கள் இம்மாத முடிவில் வேலை நிறுத்தம் செய்வதற்குத் தயாராகி வருகின்றனர். மறுபடியும் அரசாங்கத்துறை தொழிலாளர்கள் போராட்ட அணியில் சேர்க்கப்படவில்லை. தபால், தந்தி சேவை திணைக்களத்தை தவிர, ஏனைய இடங்களில் வேலைநிறுத்தம் மத்திய தர ஊழியர்களுக்கு மட்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் மத்தியிலும் கூட இரு பிரிவுகளாகத்தான் வேலைநிறுத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. ஒன்று அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் தலைமையிலான ஆலோசனைக் குழுவினால் ஒழுங்கு செய்யப்படுகிறது. மற்றது தபால் தந்தி சேவை திணைக்களத்தின் சகல தொழிற் சங்கங்களினதும் ஐக்கிய முன்னணியினால் ஒழுங்கு செய்யப்படுகிறது. இரு பகுதியாளரும் ஒரே நாளில் வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுத்துள்ளதாகத் தெரிகிறது. இருபிரிவினரினதும் பிரதான கோரிக்கையும் ஒன்றாகவே இருக்கின்றது. இருந்த போதிலும் இவ்விரு பிரிவினருக்குமிடையே ஒன்றுபட்ட தலைமை ஏதும் ஏற்படுவதாக இல்லை. அதே வேளையில், திரிபுவாதிகளின் தலைமையில் உள்ளபொது சேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் (பி. எஸ். டபிள்யூ. டி. யு. எப்.) ஒரு பகுதி வேறு ஒரு தினத்தில் வேலை நிறுத்தம் செய்யத் தயாராகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இவற்றினால் பயன் பெறப் போகிறவர்கள் யார்? நிச்சயமாக தொழிலாளர்களல்ல. அண்மையில் துறைமுக தொழிலாளர்களும், இ. போ. ச. ஊழியர்களும் போராடத் துணிந்த போது, முதலாளித்துவப் பத்திரிகைகள் எம்மைநம்பவைக்க முயல்வதுபோல், சமசமாஜத் தலைவர்களினதும், கொமன் திரிபுவாதக் கும்பலினதும் ஆர்ப்பாட்டத்தினாலும், உந்துதலினாலும் அவர்கள் போராட முன்வரவில்லை. உண்மையாதெனில், இவ்விரு கட்சிகளும் வளர்ந்து வரும் போராட்டங்களைக் கண்டு, யு. என். பியை விட கூடுதலாக அஞ்சுகின்றன. இதன் காரணமாக அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விடக்கூடும்; தாம் நாவில் நீரொழுக ஆவலோடு காத்திருக்கும் தேர்தலுக்கு உலைவைத்துவிடக் கூடும் என்று இவர்கள் அஞ்சுகின்றனர்.

## சமசமாஜ, திரிபுவாதத் தலைவர்களின் அச்சம்

உண்மையில், சமீபத்தில் நடைபெற்ற துறைமுக ஊழியர்களினதும், இ. போ. ச. ஊழியர்களினதும் வேலை நிறுத்தங்கள், சகிக்க முடியாத வேலைக் கஷ்டங்களை எதிர்த்து தொழிலாளர்களின் சுய முயற்சியால் தோன்றியவையேயாகும். சமசமாஜத் தலைவர்களும், கொமன் திரிபுவாதக் கும்பலும் தாம் தொழிலாளர்களிடம் தனிமைப்பட்டு விடுவோமென அஞ்சி வேலைநிறுத்தத்தை ஆதரிப்பதாகவும், தலைமை தாங்குவதாகவும் பாசாங்கு செய்து அரசாங்க

—12-ம் பக்கம் பார்க்க



சீன கம்யூனிஸ்ட் கட்சியினது 8வது மத்தியக் கமிட்டியின் 12வது விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தில் தலைவர் மா சே-துங் அவர்களும் உப- தலைவர் லின் பியா ஓவும். தலைவர் மா ஓ இக் கூட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். இக்கூட்டத்தின் பின் வெளி வந்த அறிக்கை சென்ற இதழிலும் இந்த இதழில் உள்ளேயும் இடம் பெற்றுள்ளது.



தற்போதைய மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி நிச்சயம் அத்தியாவசிய மானதாகவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப் படுத்துவதற்கும், முதலாளித்துவ மீட்பைத் தடுப்பதற்கும் சோஷலிஸத்தைக் கட்டி வளர்ப்பதற்குமான மிக தகுந்த சந்தர்ப்பத்திற் கேற்றதாகவும் இருக்கின்றது.

— மா சே-துங்

### தலையங்கம்

# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை வரவேற்கிறோம்

சீன கம்யூனிஸ்ட் கட்சியினது 8வது மத்திய கமிட்டியின் 12வது விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்தின் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கை முழுவதையும் சென்ற இதழிலும் இந்த இதழிலும் பிரசுரித்துள்ளோம்.

அவ் அறிக்கை மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு சாஸனமாகும். அதை வெகு கவனமாகப் படிக்கும்படி எமது வாசகர் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். மக்கள் சீன குடியரசின் சகல மாகாணங்களிலும், சுயாட்சிப் பிரதேசங்களிலும் (தைவானைத்தவிர) புரட்சிக் கமிட்டிகளின் ஸ்தாபிதத்தையும், பன்முக வெற்றியையும் ஈட்டியுள்ள மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் அபிவிருத்தியில் ஒரு முக்கிய கட்டத்தை அவ் அறிக்கை குறிக்கின்றது.

சீனத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்திரப் படுத்தியதுடன், அதைப் பாதுகாத்து, சீனத்தை உலகப் புரட்சியின் பாசறையாக்கியுள்ளதையும் அவ் அறிக்கை குறிக்கின்றது. அதுமட்டுமல்ல, நவீன திரிபுவாதிகள் ஆட்சி புரியும் ஏனைய நாடுகளிலும், சோவியத் யூனியனிலும் ஏற்பட்டதைப் போன்று சீனத்திலும் மீண்டும் முதலாளித்துவத்தைப் புகுத்துவதற்கு வீண் முயற்சி எடுத்த லியோ ஷாஓ-சியினால் தலைமை தாங்கப்பட்ட திரிபுவாத பிற்போக்கு சக்திகள் பூரணமாகத் தோற்கடிக்கப்பட்டதையும் அவ் அறிக்கை குறிக்கின்றது.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி இவ் வெற்றிகளை ஈட்டுவதற்குக் காரணம், எமது சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டான தோழர் மா சே-துங் அவர்கள் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சிக்கு மேதாவிலாசத்துடன் வழிகாட்டியதும், அவர் தானே முன்னின்று அதை வழிநடத்தியதுமேயாகும். அதுமட்டுமல்ல, இப் புரட்சியின் வெற்றிகள் இன்றைய சகாப்தத்தின் மார்க்சிஸம்—லெனினிஸமான மா சே-துங் சிந்தனைக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியை சீனத்தில் நடக்கும் அராஜகம் என்று கூறிய திரிபுவாதப் பண்டிதர்களும், பிற்போக்குவாதிகளும் இத்துடன் சீனு அழிந்துவிடும் என்று ஆரூடம் கூறினர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கும், விரும்பியதற்கும் நேர்மாறாக கலாச்சாரப் புரட்சியின் விளைவாக சீனம் மேலும் வலிமை பெற்று உருக்கேறிய ஒருமைப்பாட்டுடன் திகழ்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் தற்போதைய மாபெரும் வெற்றிகள் இக் கனவான்களுக்கு எட்டிக்காயைப் போல் கசந்திருக்கும். அதே வேளையில் உலகெங்கணுமுள்ள முற்போக்கு, புரட்சிகர சக்திகள் இவ் வெற்றிகளை தமது சொந்த வெற்றிகளாகக் கருதி வரவேற்றுள்ளதோடு, தமது சொந்த நாடுகளிலும் புரட்சிகர நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு மேலும் உந்தப்பட்டும், உற்சாகப்பட்டுமுள்ளன.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி லியோ ஷாஓ—சியினாலும் அவருக்குப் பின்னால் நின்ற தீய கூட்டத்தினராலும் தலைமைதாங்கப்பட்ட பிற்போக்குவாத, திரிபுவாத சக்திகளுக்கும், தோழர் மா சே-துங் தலைமை தாங்கிய புரட்சிகர தலைமை ஸ்தாபனத்திற்கும் இடையே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் நடைபெற்ற மாபெரும் வர்க்கப் போராட்டமாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் சீன மக்கள் புரட்சியை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதற்கு தோழர் மா சே-துங் அவர்களின் மேதைத் திறன் வழிகாட்டியது. நவீன திரிபுவாதிகளினால் தற்போது ஆளப்படுகின்ற நாடுகளிலுள்ள புரட்சிவாதிகளுக்கு இது ஒரு முக்கிய பாடமாகும்.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சிக்குப் பின்னர் சீனம் மேலும் வலிமை பெற்றுள்ளது. அது முன்னெப்போதுமில்லாதவாறு மா சே-துங் சிந்தனையைச் சுற்றி அரசியல் ரீதியாக மேலும் ஐக்கியப்பட்டுள்ளது. தொழிலாளர்களும், கீழ்—மத்தியதர விவசாயிகளும் முன்னணிப் பாத்திரம் வகிக்கும் ஒரு புரட்சிகர சீர்திருத்தம் கல்வித் துறையில் ஏற்கனவே ஏற்பட்டுள்ளது; மாபெரும் கைத்தொழில் புரட்சி ஆரம்பமாகியுள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியினது 8வது மத்தியக் கமிட்டியின் 12வது விரிவுபடுத்தப்பட்ட கூட்டத்திற்குப் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கையையும், இந்த எல்லா வெற்றிகளையும் சகல புரட்சிவாதிகளும் வரவேற்கின்றனர். இவ் அறிக்கை சுட்டிக்காட்டுவது போன்று உலகப் புரட்சி மாபெரும் ஒரு புதிய சகாப்தத்தை அடைந்துள்ளது. இக் கால கட்டத்தில், படுபிற்போக்கு இரு சக்திகளான அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் நவீன திரிபுவாதமும் அம்பலப் படுத்தப்பட்டுள்ளதுடன், அவை தமக்குள்ளே இருக்கும் உள் முரண்பாடுகளின் விளைவாகவும் சீரழிகின்றன.

மக்கள் சீனம் அதன் புரட்சிகர அறைகூவலுடன் உலகெங்கணுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காக மாறியுள்ளது. இன்று பீகிங் நகரம்தான் உலகப் புரட்சியின் மத்தியஸ்தானம். சந்தேகமின்றி தோழர் மா சே-துங் அவர்கள்தான் அதன் தலைவர்.

### கிளிநொச்சி பஸ் டிப்போவில்

# பொலிஸ் காடைத்தனம்

## கிளிநொச்சி எம். பியும், தமிழரசுச் சங்கமும் கருங்காலித்தனம்

அண்மையில் யு. என். பி—தமிழரசு பிற்போக்கு ஆட்சியின் காவலரான பொலிஸ் கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவினுள் நுழைந்து அங்கு இருந்த பஸ் சாரதியொருவரை மிருகத்தனமாகத் தாக்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. அன்றிரவு பஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த நேரம் குறிப்பவரைச் சிவில் உடையில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் "உனக்கென்ன இங்கே வேலை?" என்று மிரட்டியதாகவும், அப்பொழுது அவ்விடம் வந்த பஸ் சாரதியொருவர் "பஸ் நிலையத்தில்தான் அவருக்கு வேலை" என்று சொன்னதைத் தொடர்ந்து வாக்குவாதம் மூண்டு காரசாரமான பேச்சுடன் முடிந்ததாகவும் அறியப் படுகிறது.

பின்னர் அந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் சுமார் 25 பொலிசாரை அழைத்து வந்து டிப்போவினுள் அனுமதியின்றி நுழைந்ததுடன், முன்னர் வாக்குவாதப்பட்ட சாரதியை நையப்புடைத்து, பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் சென்றதாகவும் அங்கு பொலிஸ் மேலதிகாரிகளும், பொலிஸ் கான்ஸ்டபிள்களும் மிருகத்தனமாகத் தாக்கியதாகவும், பின்னர் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி எம். பி 'பண்டிதர் கா. பொ. இரத்தினத்தைக் கோரிய போது, சாதாரணமாக தமிழ் எழுத்துப் பிழைகளுக்காக கடிதங்கள் எழுதி, பத்திரிகைகளில் அறிக்கை விடும் பண்டிதர், இவ்விஷயத்தில் தனக்கே உரித்தான பாணியில் கையை விரித்ததுமல்லாமல், பொலிசாருடன் சமாதானமாகப் போங்கள்' என்று சமாதானத் தூதும் விட்டதாக பஸ் தொழிலாளர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

அத்துடன் அங்குள்ள தமிழரசுச் சங்கமான இலங்கை வசுத் தொழிலாளர் கழகமும் கருங்காலி வேலையில் ஈடுபட்டுள்ளதாகப் பேசிக்கொள்ளப் படுகிறது. தமிழரசுச் சங்கத்தினர், யு. என். பி. தமிழரசு ஆட்சியின் காவல் நாய்களைக் காப்பாற்றுவதற்காக "சமாதான" வேலைகளில் ஈடுபடுவதுடன், பொலிசுக்கு எதிராகச் சாட்சிகளைச் சொல்ல விடாதும் தடுக்கின்றனராம். இதற்கு டிப்போவிலுள்ள மேலதிகாரி ஒருவரும் உடந்தை என்று பஸ் ஊழியர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இதுபற்றி பஸ் ஊழியர் ஒருவரிடம் கேட்ட பொழுது, "பொலிஸ் தமிழரசுக் கட்சியினரின் பாதுகாவலர்கள். அவர்களின் தலைமையில் தொழிற் சங்கம் இருந்தால், அவர்கள் அதைப் பாவித்து பொலிசாரைக் காப்பாற்றத் தான் முயற்சிப்பார்கள். ஆனபடியால் தொழிலாளர்கள் ஒன்றைத் தீர்மானிக்க வேண்டும். அதாவது தொடர்ந்தும் அவர்களுடைய சங்கத்தில் இருந்து அல்லற்படுவதா? அல்லது சரியான ஒரு புரட்சிகர—போராட்டத்தில் விடாப்பிடியாகவும், உறுதியாகவும் நின்று சரியான வழிகாட்டக்கூடிய—பொலிஸாரின் இத்தகைய அநியாயங்களை எதிர்த்துப் போராடக்கூடிய ஒரு தலைமையில் அணிதிரள்வதா? ஆகையால் தொழிலாளர்கள் வகுப்புவாத ரீதியற்ற ஒரு புரட்சிகரத் தொழிற் சங்கத்தில் இணைந்து போராடுவதே விமோசனத்துக்கு வழி" என்றார்.

அத்துடன், "தமிழரசு தொழிற்சங்கத்தில் சேர்ந்ததினால் தேர்தல்களுக்கு எங்களைப் பயன்படுத்தினார்களே ஒழிய எங்களுக்கு எந்த விதமான உரிமைகளைப் பெறுவதற்கும் வழி காட்டவில்லை" என்றும் கூறினார்.

# மாஓ பதக்கத்தைக் கண்டு பாலா தம்பு நடுக்கம்

கடந்த 2-11-1968ந் தேதி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் சி. எம். யூ. கூட்டம் ஒன்று நடந்தது. அக்கூட்டத்தில் பேசவந்த 'ட்ரொட்ஸ்கியவாதி' பாலாதம்பு, கூட்டத்தின் மத்தியில் மாஓ பதக்கம் அணிந்தவர்களைக் கண்டதும் தடுமாற்றமுற்று உரத்த சத்தமிட்டு ஊளையிடத் தொடங்கினார். தன்னைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினர் என்று எண்ணிவிட்டாரோ என்னவோ, உடனே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் தலைமையின் கீழுள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தையும், அதன் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசனையும், இ. தொ. ச. ச.வில் அங்கம் வகிக்கும் ஐக்கிய இரசாயன ஊழியர் சங்கத்தையும் வாய்க்கு வந்தபடி திட்டினார். மக்கள் சீனத்தின் மாபெரும் தலைவரும், இன்றைய யுகத்தின் தலைசிறந்த மார்க்சிஸ—லெனினிஸ மேதையுமான தோழர் மா சே-துங்கையும் கூட நாக்குழற—நடுக்கத்துடன் தாக்கினார்.

சந்திரனைக் கண்டு நாய் குரைப்பதுபோல் அமெரிக்க பக்தன் பாலாதம்பு இப்படிக் குரைத்ததுபற்றி யாரும் ஆச்சர்யப்படவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவன் ஜோன்சன் முதல், பிரதமர் டட்லிவரை மாஓ பதக்கங்களுக்குப் பயந்து கம்யூனிஸ எதிர்ப்பு ஊளையிட்டுக் குரைக்கும்போது, தொழிலாளர் இயக்கத்தில் பிளவை உண்டாக்கி, அவர்களின் புரட்சிகர உணர்வை மழுங்கடித்துக் கொண்டிருக்கும் பாலாதம்பு பய்ந்து நடுங்குவதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது?

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தை ஒரு "சீன வெடி" என்றும், தனது சி. எம். யூ. ஒரு "கைக்குண்டு"

12-ம் பக்கம் பார்க்க

# யு. என். பி. ஆட்சியின் குழப்பமான சுகாதார வேலை

## ஒரு புறம் டாக்டர்கள் பற்றுக் குறை

## மறு புறம் டாக்டர்களுக்கு வேலை இல்லை

உணவு, உடை, உறைவிடம் போலவே சுகாதாரமும் மக்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். தற்காலத்தில் சுகாதாரம் என்பது, பூரணமான உடல் நலமும், மன நலமும் என்று மட்டுமல்லாமல் சமூக நலம் சம்பந்தப்பட்டதொன்ருகவும் கருதப் படுகிறது. எனவேதான் நோயும், பலவீனமும் இல்லாத நிலைதான் சுகாதாரம் என்றில்லாமல், அது, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு திட்டமாகவும் மாறவேண்டும்.

இலங்கையில் சுகாதாரம் உட்பட, சமூக சேவைகளுக்கு பெருந் தொகையான பணத்தை கடந்தகால அரசாங்கங்கள் செலவிட்டன என்று கூறப்படுகிறது. ஆனல், உண்மையாக சுகாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை நாளாந்த அனுபவத்தின் மூலம் அறியலாம்.

கொழும்பிலுள்ள ஒரு ஆஸ்பத்திரிக்கோ, அல்லது வெளி மாகாணங்களில் உள்ள ஓர் ஆஸ்பத்திரிக்கோ போகும் ஒருவர் பெயரளவில் உள்ள சுகாதார நிலையங்களில் நிலவும் அவல நிலையைக் காணலாம். பல நோயாளிகள் டாக்டர்களினல் பரிசோதிக்கப்படுவதற்குப் பல மணித்தியாலங்களாகக் காத்துக் கிடக்க வேண்டியிருப்பதும் அவ்வாறு காத்திருக்கும் போது பலர் அங்கு மயக்கமுற்ற சம்பவங்களும் பல நடந்துள்ளன.

### இட நெருக்கடி

பொதுச் சிகிச்சைகளுக்கும், சத்திர சிகிச்சைகளுக்கும் அனுமதி கோரும் நோயாளிகளுக்கு இடமில்லை (பற்ருக்குறை) என்ற பதிலே கிடைக்கிறது. உண்மையில், நமது ஆஸ்பத்திரிகளில் பல வற்றில் இட நெருக்கடி மிக மோசமாக உள்ளது. கொழும்பிலுள்ள பெரிய பிரசவ ஆஸ்பத்திரிகளிலும், லேடி றிட்ஜ்வே குழந்தைகள் ஆஸ்பத்திரியிலும் நிலைமை இவ்விதமானதே. அங்கொடையில் உள்ள பெரும் மன நோயாளர் ஆஸ்பத்திரியிலும் கூட, அங்குள்ள இட வசதியிலும் பார்க்க, அங்கு தங்கிச் சிகிச்சை பெறச் செல்வோரின் தொகை அதிகம். இந்நாட்டின் ஆஸ்பத்திரிகள் பல வற்றில் கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம்.

இந்த இக் காட்டான நிலைமையைப் பற்றி அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கமும், சுகாதார இலாகாவின் பல்வேறு தொழிற்சங்கங்களும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளன.

### டாக்டர்கள் பற்ருக்குறை

இவற்றுடன் டாக்டர்களும் பயிற்சிபெற்ற தாதிமார்களும் தேவைக்கேற்ப இல்லாத பிரச்சினையும் சேர்ந்துள்ளது. டாக்டர்கள் பற்ருக்குறை மிகமோசமாக இருப்பதால் பல வைத்திய நிலையங்களைக் கொண்டு நடத்த முடியாதிருப்பதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தனது மகஜர் ஒன்றில் கூறியுள்ளது. மறுபுறத்தில் வைத்திய பயிற்சியை முடித்துக் கொண்ட டாக்டர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை என யு. என். பி. அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பட்ஜட்டில் பணம் ஒதுக்கப்படாத காரணத்தால் தமது படிப்பை முடித்துக் கொண்ட 60 புதிய டாக்டர்களுக்கு அரசாங்க சேவையில் வேலை கிடைக்கவில்லை. ஒரு வைத்தியக் கல்லூரி மாணவனை டாக்டராக்குவதற்கு அரசாங்கம் கிட்டத்தட்ட 20,000 ரூபாய் செலவிடுவதாகக் கூறப்படுகிறது. இவ்வளவு பெருந் தொகையைச் செலவிட்டுவிட்டு அந்த டாக்டரை வேலைக்கு அமர்த்த முடியாதிருக்கிறது.

ஜனத்தொகைக்கும் டாக்டர்களுக்குமிடையில் தற்போதுள்ள விகிதாச்சாரம் படுமோசமாக உள்ளது. நிரந்தரச் செயலாளர் ஒருவரைக் கொண்ட கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, மனித சக்தி ஆகியவை சம்பந்தமாகத் திட்டமிடும் குழு ஒன்று 1967 ல் வெளியிட்ட ஓர் அறிக்கையில் ''மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வைத்திய வசதிகளின் மட்டத்தை ஜனத்தொகைக்கும் டாக்டர்களுக்குமிடையே உள்ள விகிதாச்சாரம் நன்ருக எடுத்துக் காட்டுகிறது'' என கூறுகிறது.

விளக்கமாகச் சொன்னல் 5000 பேருக்கு ஒரு டாக்டர் வீதமே இருக்கிருர். வைத்தியக் கல்லூரியில் வருடமொன்றுக்கு 200 டாக்டர்களை மாத்திரமே உருவாக்க முடியும். இந் நிலைமையைச் சீர் படுத்தி மூவாயிரம் பேருக்கு ஒரு டாக்டர் வீதம் வைத்திருக்க எண்ணுவதாலும் அரசாங்கம் மிகப் பெரும் பின்வாங்கலுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. (1) சேவையிலிருந்து விலகியவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களை நியமித்தல் (2) இளைப்பாறுவோருக்குப் பதிலாக ஆட்களை நியமித்தல் (3) டாக்டர்களுக்கும் ஜனத்தொகைக்கும் இடையே உள்ள விகிதாச்சாரத்தைப் பூரணமாக்கும் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் போது-அதாவது 1971 ல்-தேவையானேர் தொகை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் மொத்தம் 2060 டாக்டர்கள் தேவைப் படுகின்றனர். ஐந்து வருடங்களில்-1971 ம் ஆண்டளவில் ஆயிரம் டாக்டர்களை மாத்திரமே வைத்தியக் கல்லூரியினல் உருவாக்க முடியும். எனவே அரசாங்கம் புளுகியடிக்கும் பெயரளவில் உள்ள ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற முடியாது. வெளி நாடுகளில் வைத்தியக் கல்வியைப் பெறுவதற்கும் வெளி நாட்டுச் செலாவணி இல்லை. அரசாங்கம் அதன் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டுச் செலாவணியில் 60 லட்சம் ரூபா தேவைப்படுகிறது.

### தாதிமார் பற்ருக்குறை

தாதிமார் பற்ருக்குறை மற்றுமொரு பிரச்சினையாகும். கிடைக்கக் கூடிய புள்ளி விபரங்களின் படி பூரண பயிற்சி பெற்ற தாதிமார் 3865 பேர் மட்டுமே உள்ளனர். இதுவும் சாதாரணத் தேவையிலும் மிகக் குறைந்ததாகும்.

1964 ல் நடத்தப்பட்ட பரிசிலனையின் படி இலங்கையில் 407 விதமான வைத்திய நிலையங்கள் உள்ளன. இந் நிலையங்களின் மொத்தத் தொகை 34,454 ஆகும். தற்போது 1000 பேருக்கு 3.2 கட்டில்களே உள்ளன.

போதியளவு மருந்துகளும் மற்றும் வைத்தியம் சம்பந்தமான பொருட்களும் தேவையான உபகரணங்களும் இல்லாத எத்தனையோ ஆஸ்பத்திரிகளில், அவற்றைப் பாவிக்கக் கூடிய வைத்தியர்கள் இல்லாததாலும் இன்னும் பல காரணங்களாலும் கறள் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

### நோயாளர் நிலை

சிகிச்சை பெறச் செல்பவர்களில் பெரும்பாலோர் சத்துள்ள உணவுக் குறைவு, வயிற்ருேட்டம் ஆகிய நோய்களாலேயே பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய்கள் மனிதனின் உடல் பலத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் ஊறு விளைவிக்கின்றன.

சுருங்கச் சொன்னல் இன்றைய சுகாதார நிலை திருப்திகரமாயில்லை. நோயாளர்களின் தேவைகளுக் கேற்ப-- அவர்களுக்கு வேண்டிய ஆஸ்பத்திரி வசதிகளும் இல்லை. இவை விரைவாகவும், தேவைக் கேற்பவும் கிடைக்காததால் சிகிச்சைக்காகக் காத்துக் கிடக்கும் மக்கள் கூட்டம் டாக்டர்களையும், மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களையும் நிந்தனை செய்யும் சூழல் உருவாகி விட்டது.

சிறந்த சுகாதார நிலைமைகளின் கீழ் நோய்களைத் தடுக்க முடியும். நோயாளர்களின் வியாதியை விரைவாகக் குணப்படுத்தி ஆயுளை நீடிக்கச் செய்ய முடியும். இதற்குத் தேவைப் படுவது வைத்திய வசதிகளுக்கான செலவேயாகும். போதிய நிதி இல்லை என்ற நிலைமை ஆரோக்கிய மற்ற ஒரு நாட்டைத்தான் உருவாக்கும்.

இன்று தேவையான அளவு பணம் இல்லை என்ற நிலைமை ஒரு புறமிருக்க, நாளாந்தம் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக சுகாதார சேவைகளின் செலவுக்கென உள்ள நிதிகளைக் கூட கட்டுப் படுத்த வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. இதன் பலனுக நோய்த் தடுப்பு வேலையும் சிகிச்சையும் முழுதாகத் தடைப்படும் நிலை உருவாகலாம்.

ஏனைய பிரச்சினைகளுக்கும் பொருளாதாரமே காரணமாக இருப்பது போல் நமது நாட்டின் சுகாதாரப் பிரச்சினைக்கும் பொருளாதாரமே காரணமாக இருக்கிறது. இன்றையப் பொருளாதார நெருக்கடிக்கு யு. என். பி. யின் வர்க்க ரீதியான ஏகாதிபத்தியச் சார்பு கொள்கையே காரணம்.

### பிரச்சினை தீர மார்க்கம்

ஆனல் யு. என். பி. இதனை மூடி மறைக்கிறது. தனது தோல்விகளுக்கான அடிப்படை காரணத்தை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. அதற்குப் பதிலாக இப் பிரச்சினையுடன் சம்பந்தமில்லாத சூழ்நிலைகள் மீது பழியைப் போட்டு அது தனது நிலையைப் பாதுகாக்க முனைகிறது. தமது அரசாங்கத்தின் தோல்விகளுக்கு—தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமைக்குக் காரணம் ஜனத் தொகைப் பெருக்கம்தான் என யு. என். பி. தலைவர்கள் கூறித் திரிகின்றனர்.

இன்று யு. என். பி. அரசாங்கம் மனமொடிந்த நிலையில் இருக்கிறது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு உலகச் சந்தையில் விலை குறைவாய் இருப்பதால் பெரும் நட்டத்தை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. எனவே, பொருளாதார ரீதியில் எதுவித அபிவிருத்தியையும் அடைய முடியவில்லை. ''இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவியிலும் பார்க்க ஏற்றுமதிப் பொருட்களுக்குக் கிடைக்கும் நட்டம் அதிகம்'' என கூறப்படுகிறது. இதனுல் சுகாதாரம் போன்ற சமூக நல்வாழ்வுத் திட்டங்களுக்கு பணம் செலவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சிக்கலிருந்து விடுபடக் கூடிய அளவுக்கு யு. என். பீ. யின் கொள்கை இல்லை. இருக்கவும் மாட்டாது.

இந்தச் சுகாதாரப் பிரச்சினையையும், வேறு பல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான ஒரே வழி தற்போதுள்ள ஏகாதிபத்தியச் சுரண்டல் அமைப்பை அடித்து நொறுக்கி, தேசிய பொருளாதாரத்தை வளர்க்க கூடியதான—அப் பொருளாதாரத்தை மக்களின் நல்வாழ்வுக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் உபயோகிக்கக் கூடியதான அரசைத் தோற்றுவிப்பதுதான்.

---

## அல்பேனிய தொழிலாளர் கட்சிக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துச் செய்தி

அல்பேனிய தொழிலாளர் கட்சியின் 27 வது ஆண்டு விழாவையொட்டி, அக் கட்சியின் மத்திய கமிட்டிக்கு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பின்வரும் வாழ்த்துச் செய்தியை அதன் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் அனுப்பியுள்ளார்.

**உங்களது வீரஞ் செறிந்த அல்பேனிய தொழிலாளர் கட்சியின் 27 வது வருடாந்த விழாவின் போது வீரமிக்க அல்பேனிய மக்களுக்கும், உங்களது வீரமிக்க கட்சிக்கும், அதன் மாபெரும் தலைவரும் தலைசிறந்த மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுமான தோழர் அன்வர் ஹோ ஷாவுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.**

**நீங்கள் மார்க்சிஸம்-லெனினிஸத்தைப் பாதுகாத்ததற்காகவும், ஏகாதிபத்தியம், கிரேக்க பாசிஸ்ட் பிற்போக்கு, டிட்டோவிய, குருஷ்சோவிய நவீன திரிபுவாதம் ஆகியவற்றை எதிர்த்து தீரமுடன் போராடியதற்காகவும் உங்களை வாழ்த்துகின்ருேம்.**

**நீங்கள் மேலும் பல வெற்றிகள் பெற நாம் வாழ்த்துகின்ருேம்.**

---

## புறுக் பொண்டில் வேலை நிறுத்தம்

புறுக் பொண்ட் தொழிற்சாலையில் அச்சுப் பகுதியிலுள்ள ஒரு தொழிலாளியைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ததை ஆட்சேபித்து புறுக் பொண்டில் உள்ள 500 தொழிலாளர்கள் சென்ற 14 ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## நம்மைச் சுற்றி

நவம்

# இழிவுபடுத்தும் இரியகொல்லே

## பரிகாசத்திற்கும் பரிதாபத்திற்கு முரிய கல்வி அமைச்சரின் புதிய கண்டுபிடிப்பு

யூ. என். பி. ஆட்சியாளருக்கு கம்யூனிஸத்தைப் பற்றிய கிலி இருந்து வருவது அனைவரும் அறிந்த சங்கதி. ஆனால் சமீப நாட்களாக யூ. என். பி.க்கும், அதன் கல்வி அமைச்சருக்கும், கல்வி இலாக்காவின் உயர் அதிகாரிகளுக்கும் கம்யூனிஸத்தைப் பற்றிய இக் கிலி அதிகரித்து, அவர்களைக் கண்டபடி வாய் குளற வைத்திருக்கிறது. அவர்கள் வாய்க்கு வந்ததையெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பாடசாலைகளிலும், குறிப்பாக பல்கலைக் கழகங்களிலும் ''கம்யூனிஸப் பேய்'' புகுந்து விட்டதாம். மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ள அமைதியின்மைக்கு இது தான் காரணமாம். ஆதலால் பாடசாலைகளிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்தும் இந்த ''கம்யூனிஸப் பேயை'' விரட்டியடிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் படுகிறதாம். இப்படிப் பத்திரிகைகளில் விளம்பரமும் செய்கிறார்கள்.

தற்போதைய கல்வி அமைப்பு இந் நாட்டின் தேவைக்கும் அதன் வளர்ச்சிக்கும் ஏற்றதாயில்லை. இப்போதைய கல்வி அமைப்பு ஏகாதிபத்தியத்திற்கு அனுசரணையானதும்; சுரண்டும் பிற்போக்கு வர்க்கத்திற்குச் சேவை செய்வதும், கேடுகெட்ட இன்றைய சமூக அமைப்பைத் தொடர்ந்தும் கட்டிக் காப்பதுமாகும். இந்த நோக்கத்தை மேலும் பூரணப் படுத்தவும், ஸ்திரப் படுத்தவும் கூடிய முறையில் தான் யூ. என். பி. ஆட்சியாளரின் கல்விக் கொள்கை இருந்து வருகிறது. இக் கொள்கையைச் சரி வர நிறைவேற்ற வேண்டுமென்ற பேராசையினால் தான் ஆட்சியினர் கல்வித் துறையில் பெரும் குழப்பங்களை உண்டாக்கி வருகின்றனர். யு. என். பி. ஆட்சி பீடம் ஏறியதும் கல்வி அமைச்சைப் பொறுப்பேற்றுக்கொண்ட இரியகொல்லே ஏதோ பெரிய சாதனைகளைச் செய்வதாக தம்பட்டமடித்துக் கொண்டு குட்டையைக் குழப்புவதில் சம்பியனாக இருந்து வருவதும் இதனால் தான். இவ்விதமான குட்டையைக் குழப்பும் காரியமும், ஆட்சியாளரின் கல்விக் கொள்கையும் தான் பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பிரச்சினைகளை உருவாக்கி மாணவர் மத்தியில் அமைதியின்மையும், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் குமுறுகிறார்கள்; மாணவர்கள் கொதிக்கிறார்கள்.

உண்மை இவ்வாறிருக்க, இதை மூடி மறைத்து விட்டு ஆசிரியர்கள்—விரிவுரையாளர்கள் ஆகியோரின் குமுறலையும், மாணவர்களின் கொதிப்பையும் அடக்கி, நசுக்கி விட பாசிஸத் தன்மை வாய்ந்த அடக்கு முறை நடவடிக்கைகளை அமைச்சர் இரியகொல்லேயும் அவருடைய அரசாங்கத்தாரும் எடுக்கின்றனர். இதனால் ஏற்படும் பெற்றோரின் எதிர்ப்பைச் சமாளிக்கவே ''கம்யூனிஸப் பேயை'' விரட்டுவதாக விளம்பரம் செய்கின்றனர்.

ஆனால் பெற்றோருக்கு விஷயம் விளங்கி விட்டது. அவர்கள் இப்போது இரியகொல்லேக்கு சொல்கிறார்கள்: கம்யூனிஸப் பேயை விரட்டுவது இருக்கட்டும். உம்மையும் உமது அரசாங்கத்தையும் தான் விரட்ட வேண்டும்— அதுவும் விரைவாக!

★

இரியகொல்லே செய்து வரும் உருப்படாத காரியங்களால் அவர் பல முனைகளிலிருந்தும் தாக்கப்படுவது நாடறிந்த விஷயம். அதனால் நெஞ்சு வெந்த இரியகொல்லே மேடை தோறும் மற்றவர்களை வாய்க்கு வந்த படி திட்டி இழிவு படுத்தி வருகிறார். குறிப்பாக பல்கலைக்கழக மாணவ—மாணவிகள் பழுது பட்டவர்கள் — ஒழுக்கங் கெட்டவர்கள் என்று சொல்லித் திரிகிறார். ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் இதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்று அவர்கள் மீது பழியைப் போடுகிறார். அண்மையில் ஊவாப் பகுதிக்குச் சென்றிருந்தபோதும் இப்படித் திட்டித் தீர்த்திருக்கிறார்.

அங்கு ஒரு பாடசாலைக் கூட்டத்தில் மூன்று மணித்தியாலங்கள் பேசிய இரியகொல்லே அந்த மூன்று மணித்தியாலயங்களையும் ஆசிரியர், விரிவுரையாளர்கள், பல்கலைக் கழக மாணவ — மாணவியர் மீது வசை பாடுவதிலேயே கழித்தாராம். ''கல்வி அமைச்சர் என்பவர் மற்றவர் மீது வசை பாடுபவர் ஆவர்'' என்ற புதிய பொருளை உண்டாக்கி விட்ட இரியகொல்லே, அந்தக் கூட்டத்தில் தனது ஒரு புதிய கண்டுபிடிப்பையும் வெளியிட்டாராம். அதாவது, சமீபத்தில் பாரிஸ் மாணவரின் புரட்சிக்குக் காரணம் அவர்கள் மத்தியில் ஒழுக்கயீனம் ஏற்பட்டுள்ளது தான் என்றும், பல்கலைக் கழக விடுதிகளில் நடு நிசிக் காலத்திலும் மாணவிகள் விடுதிகளுக்கு மாணவர்களும், மாணவர் விடுதிகளுக்கு மாணவியரும் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரெஞ்சு ஆட்சியாளரும், பல்கலைக் கழகங்களின் நிர்வாகமும் அங்கீகரிக்காதது தான் பாரிஸ் மாணவரின் எழுச்சிக்குக் காரணம் என்றும் திருவாய் மலர்ந்தாராம்.

படுக்கையிலும் கூட மாணவர் — மாணவியர் கற்பைப் பற்றிச் சிந்திக்கும் பண்பைப் பெற்று விட்ட இரியகொல்லே பாரிஸ் மாணவரின் எழுச்சிக்கும் இது தான் காரணம் என்று கூறுவதில் வியப்பில்லைதான் பாரிஸ் கிளர்ச்சிக்கு மட்டுமல்ல, இன்று உலகமெங்கும் நடைபெறும் மாணவர் கிளர்ச்சிக்கும் பாலுணர்ச்சி தான் — உடலுறவு விவகாரம் தான் காரணம் என்று இரியகொல்லே இன்னும் சில நாட்களில் அறிக்கை விட்டாலும் விடலாம் என்று எதிர்பார்ப்பதிலும் தப்பில்லை தான். அவருடைய இந்தப் புதிய கண்டுபிடிப்பை உலகறிய வெளியிட்டு, ''உலகப் புகழ் பெற்றால்'' அதனை அவருடைய யு. என். பி. அரசாங்கமும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்பதிலும் ஐயமில்லை.

பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள். படித்துப் பட்டத்துடன் வெளியேறினால் வேலையில்லாத நிலைமை. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்காத—தீர்க்கத் தெரியாத—தீர்க்க முடியாத பரிகாசத்திற்கும் பரிதாபத்திற்குமுரிய இரியகொல்லேயும் அவருடைய அரசாங்கத்தாரும், மாணவ—மாணவியர் ''கற்புப் பரிசோதனையில்'' இறங்கி அவர்களை இழிவு படுத்தி, பெற்றோருக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்கி, அவர்களின் வசவுகளை வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கும் அழகே அழகு!

★

நாட்டின் ஏனைய மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போலவே, பட்டதாரிகள் மத்தியிலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதாக நாம் பல தடவை கூறியுள்ளோம். இதுவரை பொதுவான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கலைத் துறை, விஞ்ஞானத்துறை பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பற்றி மூச்சுக்கூட விடாத முதலாளித்துவப் பத்திரிகைகள் இப்போது, வைத்தியத் துறைப் பட்டதாரிகளுக்கும் வேலை கிடைக்காது என்ற பிறகுதான் ஏதோ புதிதாக கண்டுபிடித்ததுபோல் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி எழுதத் தொடங்கியுள்ளன. உயர் மத்திய வர்க்கமாகிய வைத்தியப் பட்டதாரிகளுக்கு வேலை இல்லையே என்பதுதான் அவர்களுடைய விசாரமெல்லாம்.

சகல வைத்தியப் பட்டதாரிகளையும் வேலையிலமர்த்த போதிய நிதி இல்லையென்று அரசாங்கம் கைவிரித்து விட்டது. முதல் நாற்பது வைத்தியப் பட்டதாரிகளை மட்டும் தற்போதுள்ள அடிப்படைச் சம்பளமாகிய 490 ரூபாயில் வேலைக்கமர்த்துவதென்றும், ஏனைய வைத்தியப் பட்டதாரிகளை மொத்தம் 250 ரூபாயில் வேலைக்கமர்த்துவதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாம். விரும்புகிறவர்களுக்கு வெளிநாட்டில்—குறிப்பாக ஆபிரிக்காவில் வேலை தேடித் தரவும் அரசாங்கம் முயற்சிப்பதாக மந்திரி ஒருவர் அறிவித்திருக்கிறார்.

ஒரு வைத்திய மாணவனுக்கு வருடம் ஒன்றுக்கு சராசரி 3800 ரூபா அரசாங்கம் பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து செலவிடுகிறது. ஐந்து வருட வைத்தியப் படிப்புக்கு 19000 ரூபா பொதுப்பணம் ஒரு வைத்திய மாணவனுக்குச் செலவிடப் படுகிறது. எமது வரிப் பணத்தில் படித்த மாணவனின் சேவை இலங்கை மக்களுக்கு கிடைக்க வேண்டியதற்குப் பதில், அதனைத் தடுத்து ஆபிரிக்காவுக்கு அனுப்ப முயற்சிக்கிறது யு. என். பி. அரசாங்கம். அதுவும் பொருளாதார விருத்திக்கு மூலதனத் தட்டுப்பாடு பெரும் தடையாய் இருக்கிறது என்று கூறி இலங்கையின் ''பெரும் பொருளாதார மூளைகள்'' அந்நிய நாடுகளுக்குச் சென்று மூலதனப் பிச்சை வேண்டித் திரியும் போது, இப்படி ஒரு வீணான செலவா?

1967-ம் ஆண்டில் பரீட்சை எடுத்தவர்கள் உட்பட இலங்கையில் பன்னிராயிரம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்குச் செலவிட்ட பொது மக்களின் வரிம்பணம் இதனால் வீண் தானே? 1967-68ல் பேராதனையில் ஒவ்வொரு மாணவனுக்கும் செலவிடப்படும் சராசரி செலவு வருமாறு:

| | |
|---|---|
| கலை ரூ | — 1811.87 |
| விஞ்ஞானம் | — 3668.68 |
| வைத்தியம் | — 3796.43 |
| பொறியியல் | — 3748. 4 |
| விவசாயம் | — 5263.94 |
| எல்லாமாகச் சராசரி | — 2569.50 |

வேலையற்று இருக்கும் பன்னிராயிரம் பட்டதாரிகளுக்கும் ஒரு வருடத்திற்கு மட்டும் 3 கோடியே 8 லட்சத்து 34 ஆயிரம் ரூபா வீண் செலவு செய்யப் பட்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் அமைத்து விட்டுப் போன எமது நாட்டுக்கு பொருத்தமில்லாத காலனி முறைக் கல்வியால் வந்த கேடு இது. வேலை பார்க்கும் உரிமை பற்றி பெரிதாக சத்தம் போடும் முதலாளித்துவ ஜனநாயக வாதிகள் இந்த வேலையற்ற பட்டாளத்துக்கு என்ன சொல்லப் போகிறார்கள்?

பல்கலைக்கழக மாணவர் தலைவர் ஒருவர் கூறியது போல, பேனா பிடிக்கும் சந்தர்ப்பம் அவர்களுடைய கைகளுக்கு இல்லாமற் போனாலும், மக்களின் விடுதலைப் போராட்டத்தில அவர்களின் கைகளுக்கு வேறு வேலை காத்திருக்கிறது.

வர்க்க நடவடிக்கையின் ஒவ்வொரு விளக்கத்திலும் அரசியல் காணப்படுகிறது.

# ஆசியாவில் மக்களின் ஆயுதப் போராட்டங்கள் கொழுந்து விட்டெரிகிறது

## உலக வலம்

உஸ்மான்

ஏங்கெல்லாம் ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் ஆயுதந் தரித்த ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் இருக்கின்றதோ அங்கெல்லாம் ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் எதிராக மக்கள் போராடியே தீருவர். சோவியத் திரிபுவாத சமூக - ஏகாதிபத்தியத்தினதும் சகல நாடுகளிலுமுள்ள பிற்போக்காளர்களினதும் ஒத்துழைப்புடன் உலகைப் பங்கு போட்டு மக்களது ஆயுதப்போராட்டங்களை நசுக்குவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ன தான் முயற்சி எடுத்த போதிலும் உலகின் பல பகுதிகளிலுமுள்ள மக்களின் போராட்டமானது வீறு கொண்டெழுகிறது. இது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும் சோவியத் திரிபுவாதிகளினதும் விருப்பத்தில் தங்கியிராத ஒரு புற நிலை விதியாகும்.

இன்று தென் வியட்நாம், பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் காணப்படும் புரட்சிகர இயக்கங்கள் முன்னெப் போதையும் விட தீவிரமடைந்துள்ளதுடன் உலக மக்களின் புரட்சிகர தளங்கள் மேலும் விருத்தியடைந்துள்ளன. அதே நேரத்தில் ஏகாதிபத்தியமும், திரிபுவாதமும் மிகவும் பலவீனம் அடைந்துள்ளன.

உலக மக்களின் ஆயுதப் போராட்டங்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றிகள் தலைவர் மா ஓ கூறிய பின்வரும் உண்மையை நிரூபித்துள்ளன: ''அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு காகிதப் புலியாகும். சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலும் சகல நாடுகளினதும் பிற்போக்காளர்களும் அத்தகையவர்களே. அவர்கள் யாவரும் வரலாற்று மேடையிலிருந்து, புரட்சிகர மக்கள் என்னும் பலமிக்க துடைப்பத்தினால் குப்பை போலத் துடைத்தெறியப் படுவர்.''

◎

### தென் வியட்நாம்

"ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் விடுதலைக்கான தம் நம்பிக்கைகளை ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் ''புத்திசாலித்தனத்தில்'' வைக்கக் கூடாது. தங்கள் ஐக்கியத்தைப் பலப்படுத்தித் தங்கள் போராட்டத்தில் விடாப்பிடியாக இருப்பதால் மட்டுமே அவர்கள் வெற்றியடைவர். இதனையே தென் வியட்நாம் மக்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்'' இவ்வாறு தோழர் மா சே-துங் அவர்கள் 1963-ம் ஆண்டு அமெரிக்க—டின் டியம் கும்பல் தென் வியட்நாம் மக்கள் மீது தொடுத்த ஆக்கிரமிப்புக் கெதிரான தமது அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அதற்குப் பிந்திய ஆண்டுகளில் தென் வியட்நாம் மக்கள் உலக முதலாளித்துவத்தின் தலைமை வல்லரசாக விளங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துருப்புகளை தோற்கடிக்கும் வல்லமையுள்ள ஒரு படையைக் கட்டி வளர்த்துள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் பொம்மை ஆட்சிக்கும் எதிரான தென் வியட்நாம் மக்களது ஆயுதப் போராட்டம் காட்டுத் தீ போல தென் வியட்நாம் முழுவதும் பரவியுள்ளது. தலைவர் மா ஓ கூறியுள்ளார்: ''ஒரு சிறு பொறி பெரும் காட்டுத் தீயை உண்டாக்கும்''. இப் பொன்மொழி வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் இயங்கும் உள் நாட்டு பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு எதிராக தென் வியட்நாமிலும் ஆசியாவின் மறு பகுதிகளிலும் மற்றும் உலக நாடுகளிலும் நடைபெறும், மக்கள் நடத்தும் ஆயுதப் போராட்டங்கள் மூலம் நிரூபணமாகி வருகின்றது.

1959ம் ஆண்டளவில் தென் வியட்நாமில் சகல பகுதிகளிலும் வாழும் மக்கள் வாட்கள், அம்பு, வில், உள் நாட்டில் தயாரித்த துப்பாக்கி போன்ற சாதாரண ஆயுதங்கள் கொண்டு அமெரிக்க பொம்மை ஆட்சிக் கெதிராக தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். சிறு பகுதியாக இருந்த கொரில்லா பிரிவு நாளடைவில் வளர்ச்சியடைந்து எதிரியிடமிருந்து கைப்பற்றிய நவீன ஆயுதங்கள் மூலம் தம்மை ஆயுத பாணியாக்கினர். இத்தகைய ஆயுதந் தரித்த படைப் பிரிவுகளின் அடிப்படையிலேயே 1961ல் தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணியின் தலைமையில் தென் வியட்நாம் மக்கள் விடுதலைப் படை ஸ்தாபிக்கப் பட்டது.

1960ம் ஆண்டு தொடக்கம் 1967 வரை தென் வியட்நாம் விடுதலைப் படையும் மக்களும் 15 லட்சம் எதிரித் துருப்புகளை முறியடித்தனர். இதில் 3 லட்சம் துருப்புகள் அமெரிக்காவினதும் அதன் சார்பு நாடுகளினதுமாகும். இந்த ஆண்டு தொடக்கத்தில் அவர்கள் பெருமளவிலான தாக்குதலை ஆரம்பித்தனர். எதிரி வசமிருந்த ஒவ்வொரு நகரத்தையும் அவர்கள் தாக்கி எதிரிக்கு பெரும் உயிர்ச் சேதங்களையும் யுத்த தளவாடச் சேதங்களையும் ஏற்படுத்தினர். விடுதலைப் படையினதும் மக்களினதும் வெற்றிகள் மூலம் தென் வியட்நாம் மக்கள் யுத்தம் மேலும் ஒரு உயர் கட்டத்தை அடைந்தது.

ஒரு கோடியே 40 லட்சம் தென் வியட்நாம் மக்கள் 550,000 அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புகளையும், சுமார் 600,000 அமெரிக்க பொம்மை, சார்பு நாட்டுத் துருப்புகளையும் தீரமுடன் எதிர்த்துப் போராடி வியக்கத்தக்க வெற்றிகள் பலவற்றை ஈட்டியுள்ளனர். எதிரியின் ஸ்தலங்கள் பலவற்றைத் தாக்கி வியட்நாமின் ஐந்தில் நான்கு பகுதியை விடுதலையாக்கியுள்ளனர். வட வியட்நாம் மக்கள் தெற்கே வாழும் தமது சகோதரர்களுக்கு மனமார்ந்த ஆதரவையளித்து, அமெரிக்க குண்டு வீச்சை வீரமுடன் எதிர்த்து 3000க்கும் மேற்பட்ட விமானங்களை சுட்டு வீழ்த்தி உள்ளனர். வியட்நாம் மக்கள் ஈட்டியுள்ள வெற்றிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக் கெதிரான உலகம் பரந்த மக்கள் போராட்டத்திற்கு மிகப் பெரும் சேவையை ஆற்றியுள்ளது.

◎

### பர்மா

பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் பர்மிய மக்கள் தமது சொந்த முயற்சி மூலம் கடந்த இருபது வருடகாலமாக விரிவான கடும் போராட்டத்தை நடத்தி வந்துள்ளனர். மக்களது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் செம்பதாகை பர்மா முழுவதும் பறக்கத் தொடங்கியது. இது மார்க்சிஸ—லெனினிஸத்தை பர்மாவின் நிலைமையுடன் இணைத்தமைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி ''யுத்தத்தை வென்று அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்'' என்ற பாட்டாளி வர்க்க புரட்சிகர நெறியை பாதுகாத்துள்ளது. இப் புரட்சிகர நெறியானது, கட்சிக் குள்ளிருந்த இடதுசாரி, வலதுசாரி சந்தர்ப்பவாதத்தை முறியடித்து, சோவியத் திரிபுவாதிகளினதும் சீனாவின் குருஷ்சோவினதும் நிர்ப்பந்தங்களின் மத்தியில் அவற்றைத் தாண்டி 1964-ம் ஆண்டு வகுக்கப்பட்டதாகும்.

பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் அரசியல் குழு 1967ல் இயற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் பின்வருமாறு கூறியது: ''தோழர் மா சே-துங் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர் ஆவர்.'' ''மா சே-துங் சிந்தனையானது ஏகாதிபத்தியம் பூரண நோக்கிப் அழிவை போவதும், சோஷலிஸமும் கம்யூனிஸமும் உலகம் பரந்த வெற்றியை நோக்கி முன்னேறுவதுமான இன்றைய சகாப்தத்தின் மார்க்சிஸ—லெனினிஸமாகும். நமது சகாப்தத்தில் மார்க்சிஸ—லெனினிஸத்தின் மிக உயர்ந்த கட்டமாக மா சே-துங் சிந்தனை ஏற்றுக் கொள்ளப் படல் வேண்டும்'' அத் தீர்மானம் மேலும் அழுத்திக் கூறியது. ''பர்மாவின் சகல புரட்சிகர வேலைக்கும் மா சே-துங் சிந்தனை ஒரு வழி காட்டும் கோட்பாடாகும். குறிப்பாக, பாட்டாளி வர்க்கப் படையை நிர்மாணிப்பது பற்றியதும், மக்கள் யுத்தம் பற்றியதுமான மா சே-துங்கின் தத்துவங்கள் பர்மியப் புரட்சியின் வெற்றிக்கு ஒளி விளக்காக விளங்குகின்றன.'

தலைவர் மா ஓ கூறுகிறார்: ''மக்கள் படையொன்று இல்லையெனில் மக்களிடம் எதுவுமே கிடையாது.'' பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் ஆயுதப் படைகளை ஸ்தாபிப்பதிலும் வளர்ப்பதிலும் கவனம் எடுத்து அவற்றைப் புரட்சிகரப் படுத்தி அவற்றின் போராட்டச் சக்தியை அதிகரித்துள்ளது. 1964ம் ஆண்டிலிருந்து கட்சிக்குள்ளும், ஆயுதப் படைகளுக்குள்ளும் மா சே-துங் சிந்தனையை கற்பதற்கும் கையாள்வதற்குமான பிரச்சாரத்தை தீவிரமாக்கியுள்ளது, படை நிர்மாணம் பற்றியதும், மூல-உபாயம், தந்திரோபாயம் பற்றியதுமான மா சே-துங்கின் தத்துவங்களை பர்மாவின் நிலைமைக் கேற்ப கையாள்வதன் மூலம் பர்மிய மக்களின் புரட்சிகரப் போராட்டம் மேலும் வளர்ந்துள்ளதுடன் மக்கள் யுத்தத்தின் பலத்தையும் அதிகரித்துள்ளது. இத் தத்துவங்களை சிருஷ்டிகரமாக கையாண்டதன் மூலம் பர்மிய புரட்சிகர மக்கள், பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் பர்மிய பிற்போக்கு அரசாங்கத்தின் ''சுற்றி வளைத்தலும் நசுக்குதலும்'' என்ற பரந்த அளவிலான இயக்கத்தை முறியடித்ததுடன், தளப் பகுதிகளை உறுதியாக்கி மக்கள் ஆயுதப் படைகளை விரிவு படுத்தியுமுள்ளனர்.

கடந்த வருடத்தில், மிகச் சிறந்த கொரில்லா தந்திரோபாயங்களைப் பாவித்து மக்கள் விடுதலைப் படையினர் எதிரி மீது பலம் வாய்ந்த தாக்குதல்களைத் தொடுத்தனர். இந்த முறையில் அவர்கள் எதிரித் துருப்புகளை பரந்த அளவில் துடைத்தெறிந்து, பெருமளவிலான ஆயுதங்களையும் வேறு பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இன்று பர்மாவின் சகல பாகங்களிலும் கொரில்லாத் தளங்கள் உள்ளன. மக்கள் விடுதலைப் படைகள் எதிரியுடன் ஒளித்திருந்து போரிடுவதோடு பொலிஸ் ஸ்டேசன்களையும் நகரங்களையும் தாக்கி போக்குவரத்துகளைத் தடை செய்து இராணுவ லொறிகளையும் புகைவண்டிகளையும் சுக்குநூறாக்கியுள்ளனர். எல்லா இடங்களிலும் நீ வினது பிற்போக்கு துருப்புகள் திக்குமுக்காடுகின்றன.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில், பர்மிய கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடையே சென்று பிரச்சாரம் நடத்தி போராட்டத்திற்கு அவர்களைத் தயார் செய்கின்றது. புரட்சிகரத் தளப்பகுதிகள், கொரில்லாப் பகுதிகள், எதிரியின் வசமுள்ள பகுதிகள் ஆகியவற்றின் விசேஷ நிலைமைகளுக் கேற்ப வெகுஜன வேலை கொண்டு நடத்தப் படுகின்றது, முதலிரு பகுதிகளிலும், உணவு தானியங்களை அபகரிக்க பர்மிய பிற்போக்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படும் முயற்சிகளை முறியடிக்க ஏழை விவசாயிகளுக்குக் கட்சி உறுதுணையாக உள்ளது. விழித்தெழுந்த விவசாயிகள் தம்மை அணிதிரட்டி எதிரிகளின் கையாட்களை தண்டிப்பதுடன் கிராமங்களிலுள்ள எதிரியின் அரசியல், பொருளாதார ஏற்பாடுகளை உடைத்தெறிந்து, சிவப்பு அரசியல் அதிகார அங்கங்களை நிறுவுகின்றனர். பல இளம் விவசாயிகள் மக்கள் விடுதலைப் படையில் சேர்ந்துள்ளனர்.

மக்கள் ஆயுதப் போராட்டத்தினாலும், விவசாய இயக்கத்தினாலும் புத்துணர்வு அடைந்த, பிற்போக்கு அரசாங்கத்தின் கீழுள்ள முப்பதுக்கும் பேற்பட்ட நகரங்களிலுள்ள மக்கள் பட்டினி எதிர்ப்பு இயக்கங்களை நடாத்தியுள்ளனர்.

மக்கள்ஆயுதப் போராட்டமும், வெகுஜனப் போராட்டமும் ஒன்றிணைந்து நீ வின் பிற்போக்கு அரசாங்கத்தின் மேல் தாக்குதல் தொடுத்துள்ளன.

◎

### தாய்லாந்து

தாய்லாந்து மக்களது ஆயுதப் போராட்டத்தின் வெடி நகோன் பானம் மாகாணத்தில் 1965ல் வெடிக்கப் பட்டது. அன்றிலிருந்து மூன்று வருடங்களுள் தாய்லாந்து கம்யூனிஸ்ட் கட்சியின்

8-ம் பக்கம் பார்க்க

கொமுல்கா திரிபுவாதக் கும்பல் ஆட்சிபுரியும் போலந்நுதின்ள போலந்து கம்யூனிஸ்ட் கட்சி ஒரு மார்க்சிஸ லெனினிஸ அரசியல் கட்சியாகும். இக் கட்சி 1965 டிசம்பர் 4 ந் திகதி அமைக்கப்பட்டது.

''போலந்து கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் கட்சி'' என்ற தலைப்பில் போலந்து கம்யூனிஸ்ட் கட்சி நீண்ட கட்டுரையொன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது. மார்க்சிஸ - லெனினிஸத்தை கொமுல்கா துரோகக் கும்பல் காட்டிக் கொடுத்ததையும், அக்கட்டுரை அம்பலப்படுத்துகின்றது. போலந்து ஐக்கிய தொழிலாளர் கட்சி ஒரு சமூக ஜனநாயகக் கட்சியாக உருமாறிவிட்டதையும், தொழிலாள வர்க்கம் தனக்கென ஒரு புரட்சிகர அரசியல் கட்சியில்லாமல் ஒன்றையுமே செய்ய முடியாது என்பதையும், எனவே போலந்து கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது ஒரு சரித்திர ரீதியான நியதி என்பதையும் அக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. பாட்டாளி வர்க்கத்திற்கு நம்பிக்கையான ஒரு புரட்சிகரக் கட்சியாக போலந்து கம்யூனிஸ்ட் கட்சி கட்டியெழுப்பப்படுமென்றும் அக் கட்சி திரிபுவாதக் கும்பலின் ஆட்சியைத் தூக்கி எறிவதற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மீண்டும் நிறுவுவதற்கும் போராடும் என்றும் அக்கட்டுரை குறிப்பிட்டுள்ளது. சென்ற இதழில் வெளிவந்த அக் கட்டுரையின் தொடர்ச்சி இங்கே வெளியிடப்படுகிறது

- ஆசிரியர்.

போலந்து கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஒரு கட்சியாகும். கம்யூனிஸத்தின் துரோகிகளுக்கு அது மரண பயத்தை உண்டாக்குகின்ற காரணத்தால், போலந்து கம்யூனிஸ்ட் கட்சியை, சட்டபூர்வமாக அது இயங்கினுல் அவர்கள் இல்லாதொழித்து விடுவர். சட்ட விரோதமான இச் சூழ் நிலைமைகளில் கட்சியின் அமைப்பு உயர்ந்த தேவைகளுக்கு இயற்கையாகவே இணங்கவேண்டியுள்ளது. கட்சியின் நிலைகளை விரிவுபடுத்துவது பற்றிய இவ் வழிகாட்டும் சிந்தனையே பின்வரும் வரையறையை வகுத்துள்ளது: கட்சி, சிறந்த புரட்சிகரத் தன்மையும், தியாக மனப்பான்மையும் கொண்ட ஊழியர்களை உடையதாக இருத்தல் வேண்டும். அவர்கள் சோஷலிஸத்தின் துரோகிகளைப் பொறுத்த மட்டில் வெறுப்பு மனப்பான்மை உள்ளவர்களாவர். தமது சக்தியையும் திறமைகளையும் உணர்வுடனும், விருப்பமுடனும் தொழிலாளி வர்க்கத்தின் குறிக்கோளை அடைவதற்கான போராட்டத்திற்கு அளிப்பர். தேவையானபோது மிகப் பெரும் தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக உள்ளனர்.

மிகச் சிறந்த தொழிலாளி வர்க்க அமைப்பு மாத்திரம், கட்சி சுயமாகவே புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடும் என்பதற்கு உத்தரவாதமாகாது. கட்சி புரட்சிகரமானதா, அல்லது சந்தர்ப்பவாதமானதா, அல்லது எதிர்ப்—புரட்சிகரமானதா என்பது, அதன் தலைமைப் பீடத்தின் அமைப்பின் மூலமும் அதன் கொள்கைகளின் மூலமுமே தீர்மானிக்கப்படுகின்றது. கட்சி புரட்சிகரமானதா, எதிர்ப் புரட்சிகரமானதா என்பது பின்வரும் கேள்வியினுல் தீர்மானிக்கப்படுகின்றது; அதன் கொள்கை யாருக்குச் சேவைபுரிகின்றது? தொழிலாளி வர்க்கத்திற்கா? அல்லது அதன் எதிரிகளுக்கா? தொழிலாளர்களின் முத்திரையுடன் ஜம்பமளந்த போதிலும் பிரித்தானிய தொழிற் கட்சியும், பிரெஞ்சு சோஷலிஸ்ட் கட்சியும் முதலாளி வர்க்கத்துடன் சமரசம் பேசும் கொள்கையையே நடைமுறைப்படுத்துகின்றன. அவை முதலாளி வர்க்கத்தினரை விட மிகச் சிறப்பாக பெரும் மூலதனத்தின் நலன்களை பேணிக் காக்கக்கூடிய முதலாளி வர்க்கக் கட்சிகளாகும். இது போலவே, தற்போது நவீன திரிபுவாதிகளின் தலைமைப் பீடத்தின் கீழுள்ள பழைய கம்யூனிஸ்ட் கட்சிகளும் மார்க்சிஸத்திலிருந்து விலகிச் சென்று தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்குத் துரோகமிழைத்தன, அவர்கள் முதலாளி வர்க்கத்துடன் கூடிக் குலாவும் பாதையில் கால் வைத்து விட்டனர்.

### தத்துவத்தை நடைமுறையுடன் இணைத்தல் வேண்டும்

கட்சி புரட்சிகர வழிமுறைகளைப் பாவித்து, மார்க்சிஸம்-லெனினிஸம் எனும் விஞ்ஞானக் கோட்பாட்டின் அடிப்படையில் செயலாற்றி, நடைமுறையுடன் தத்துவத்தை இறுக்கமாகப் பிணைக்குமேயானுல்-அதன் கொள்கை தொழிலாளி வர்க்கத்திற்குச் சேவை செய்யவும், தலைமை அங்கமானது அதன் சொந்த நடவடிக்கைகளுக்கு வழிகாட்ட சோஷலிஸ புரட்சித் தத்துவத்தை உபயோகித்து, யதார்த்த நிலைமைகள் பற்றிய ஆராய்வின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்துவம், உலகப் புரட்சி என்பனவற்றின் தேவைக் கேற்பவும் ஆக்கபூர்வமான விதத்தில் பாவிக்குமேயானுல் — அத்தகைய கட்சியானது, வர்க்க அமைப்பு என்ற கோணத்தில் மாத்திரமல்லாது, அது ஒரு உண்மையான புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் கட்சியாகவும் இருக்கும்.

லெனின் கூறினுர்: ''புரட்சிகரத் தத்துவம் இன்றிப் புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது.'' போலந்து கம்யூனிஸ்ட் கட்சி, விஞ்ஞான சோஷலிஸ புரட்சித் தத்துவத்தையும், மார்க்சிஸ—லெனினிஸத்தையும் அதன் நடவடிக்கைளுக்கு அடித்தளமாகக் கொண்ட, போலந்து பாட்டாளி வர்க்கத்தின் கட்சியாகும். உயர் மார்க்சிஸ்ட் சிந்தனையாளர்களின் சொற்றொடர்களை வரட்டுத் தத்துவ ரீதியில் திருப்பிக் கூறுவதில்லை; அதற்கு மாருக அவை போராட்டத்தில் —நடைமுறையில் பாவிக்சப்படுகின்றன. மார்க்சிஸம், நடைமுறைக்கான பாதையையும், வழிமுறைகளையும் எடுத்துக் காட்டும் விஞ்ஞானமாகும். ஆனுல் நடைமுறை தானுகவே, யதார்த்த நிலைமைகளுக்கிணங்க முன்னேறுகின்றது. ஆனுல் இடையூறு எங்கு உள்ளது என்ருல், கட்சியின் தலைமைப் பீடம் இந்த விஞ்ஞான வழிகாட்டலை தற்போதைய நடைமுறைகளுக்கு சரியான முறையில் உபயோகிப்பதில் திறமையும் விருப்பமும் கொண்டுள்ளதா இல்லையா என்பதிலும், தனது கொள்கைகளில் தெளிவானவர்க்க, புரட்சிகர குணுதிசயங்களை பதியவைத்துள்ளதா, இல்லையா என்பதிலுமே. அத்தகைய குணும்சங்கள் கட்சியை கஷ்டங்களிலிருந்து விடுவிக்கவும், தொழிலாளி வர்க்கம் புரட்சிகரப் பாதையில் முன்னேறவும் உதவி புரியும். அத்தகைய குணும்சங்கள் மூலம், ஏற்கனவே அடைந்துள்ள நிலைமைகளை பாதுகாப்பது மாத்திரமல்ல, அவற்றை மேலும் உறுதியாக்கவும், நடைமுறைகளையும் செல்வாக்கையும் விரிவுபடுத்தவும், எதிர்கால வெற்றிகளுக்கான நிலையான அத்திவாரத்தையிடவும் இயலும். நடைமுறையுடன் தத்துவத்தை புரட்சிகரப் பாணியில் இணைப்பதன் மூலம், தொழிலாளி வர்க்கம் அதன் சரித்திர பூர்வமான கடமையை நிறைவேற்றும் போராட்டத்தில் தொடர்ச்சியான பல வெற்றிகளை ஈட்ட முடியும்.

### மார்க்சிஸத்தை லெனின் புரட்சிகரப் பாணியில் வளர்த்தெடுத்தார்

வரட்டுத் தத்துவவாதத்தை எதிர்க்கின்றேம் என்ற போர்வையில், மார்க்சிஸ — லெனினிஸத்தை ''காலத்துக்கு ஒவ்வாதது'' என மூர்க்கத்தனமாக தாக்கி, அதனை ''சிருஷ்டிகரமான முறை''யில் உபயோகிப்பதன் மூலம் நவீன திரிபுவாதிகள் மார்க்சிஸ—லெனினிஸத்தின் புரட்சிகர சாராம்சத்தைப் புறக்கணித்துவிட்டனர். மார்க்சிஸ்ட் சிந்தனையாளர்களின் விஞ்ஞானக் கோட்பாடுகளை பாதுகாப்பதும், அவற்றை மேற்கோள் காட்டுவதும் கூட வரட்டுத் தத்துவவாதமாகும் என அவர்கள் கருதுகின்றனர். அவர்களது எண்ணப்படி, மார்க்சிஸத்துடனும் அதன் புரட்சிகர சாராம்சத்துடனும் முட்டி மோதுவது தான் 'சிருஷ்டிகர'மானதாகும்! ஆனுல் உண்மையென்னவெனில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், ஆகியோரின் தத்துவங்களை உண்மையாகவும், சிருஷ்டிகரமாகவும், புரட்சிகர பாணியிலும், வளர்த்தெடுத்து பாவிப்பதன் மூலமே மிகப் பெரும் சாதனைகளை ஈட்ட முடியும், இரண்டாவது சர்வ தேசியத்திலும். அதன் கட்சிகளிடையேயும் காணப்பட்ட சமூக—ஜனநாயக வாதிகளுக்கும் சந்தர்ப்பவாதத்திற்கும் எதிரான தனது போராட்டத்தில் லெனின், சோஷலிஸ்ட் புரட்சி பற்றியதும், ஏகாதிபத்தியத்தின் பலம் குன்றிய ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது பற்றியதுமான மார்க்சின் தத்துவத்தை வளர்த்தெடுத்தார். மார்க்சிஸ தத்துவத்தை புரட்சிகர பாணியில் வளர்த்தெடுத்த லெனினின் மேதாவிலாசம், ருஷ்யாவில் அதிகாரத்தைக் கைப்பற்றியதன் மூலம் புலனுகியது.

### மாஓ மார்க்சிஸ லெனினிஸத்தை வளர்த்தெடுத்தார்.

சீனுவிலும் அதுவே நடந்தேறியது. லெனினின் தத்துவத்தை சிருஷ்டிகரமாக மா சே-துங் வளர்த்தெடுத்தமையின் பலாபலனே மக்கள் சீனக் குடியரசின் உதயமாகும். இவை யாவும் உலகப் புகழ் வாய்ந்த வரலாற்று உண்மைகளாகும். ஆனுல் ''சிருஷ்டிகர'' மான மார்க்சிஸத்தின் போலிகளான புதிய, பழைய திரிபுவாதிகளால் புரட்சியில் எத்தகைய சாதனைகளை ஈட்ட முடியும்? நூறு வருடங்களாக மார்க்ஸை ''திருத்திய'' அவர்களால் தனியொரு வெற்றியையும் அடைய முடியவில்லை. ஆனுல் வாழ்வின் உண்மைகள், அவர்களை தொழிலாளி வர்க்க நலன்களின் துரோகிகளாகவும், முதலாளிவர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்தியவர்களாகவும் கண்டிருக்கின்றன. மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி, ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டமை, சோவியத் யூனியனில் சோஷலிஸம் கட்டியெழுப்பப்பட்டமை, ஹிட்லரிஸத்தின் வீழ்ச்சி, மக்கள் சீனக் குடியரசின் உதயம், சோஷலிஸ முறையிலான அரசாங்கங்களின் உதயம், சீனுவில் தற்போது நடைபெறும் மகத்தான கலாச்சாரப் புரட்சி— ஆகிய உலகைக் குலுக்கிய நிகழ்ச்சிகள் யாவும் லெனின், ஸ்டாலின், மா சே-துங் மூவரும், மார்க்ஸினதும் ஏங்கல்ஸினதும் தத்துவத்தை புரட்சிகரமாக வார்த்தெடுத்து மேதாவிலாசத்துடனும், புரட்சிகர பாணியிலும் நடைமுறையைத் தத்துவத்துடன் உபயோகித்து, அதனைத் தத்துவத்துடன் இணைத்தனர் என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன.

### திரிபுவாதிகளின் பொதுவான வாதம்

புரட்சிகர சோஷலிஸ தத்துவத்திற்கெதிரான நவீன திரிபுவாதிகளின் போராட்டத்தில், மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் சிந்தனையாளர்களை அவர்கள் இரு குழுக்களாகப் பிரித்துள்ளனர். அவர்கள் கூறுகின்றனர்: ''மார்ச்ஸும், ஏங்கல்ஸும், லெனினும் திறமையான சிந்தனையாளர்தான். ஆனுல் அவர்களது தத்துவம் கடந்த நூற்றுண்டைப் பற்றியதாகும். எனவே அது காலங் கடந்தது. அது தற்போதைய யதார்த்த நிலைக்கு ஏற்றதல்ல.''

முதலாளி வர்க்கமும் அதன் வால்பிடிகளும், கம்யூனிஸத்தின் துரோகிகளும், ஒவ்வொரு புரட்சியாளனின் அறிவிற்கும் உண்மையான கொடையாக விளங்கும் ஸ்டாலினதும், மா சே-துங்கினதும் நூல்களுக்கெதிராக கடுமையாகத் தர்க்கிக்க முடியாதுள்ளனர். அவர்கள் இந் நூல்கள் விற்பனையாவதைத் தடை செய்கின்றனர். அண்மையில் அவர்கள் மா சே-

## மார்க்சி...

## பாதை...

## எடுத்து...

துங்கின் மேற்கோள்களை வாசிப்பதையும் தடை செய்துவிட்டனர். தொழிலாளர் மார்க்சிஸ—லெனினிஸ விஞ்ஞானம் பற்றிய அறிவு பெறுவது நவீன திரிபுவாதிகளுக்கு மிக அபாயமானது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. போலந்து கம்யூனிஸ்டுகள் ஏமாளிகளல்லர்; அவர்கள் திரிபுவாதிகளின் பொய்களை நம்பமாட்டார்கள். மார்க்சிஸ—லெனினிஸ இலக்கிய சிந்தனையாளர்களைப் பாதுகாக்க கம்யூனிஸ்டுகள் சளையாது போராட வேண்டும். மார்க்ஸ். ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மா சே-துங் ஆகியோரே அச் சிந்தனையாளர் ஆவர். அவர்களது நூல்கள், ஏகாதிபத்தியத்திற்கும் அதன் வால்பிடிகளுக்கும் எதிரான தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் மிகச் சிறந்த ஆயுதங்களாகும். இன்று மா சே-துங் மிகச் சிறந்த சோஷலிஸ்ட் தத்துவ வாதிமட்டுமல்லாது மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் இலக்கிய சிந்தனையாளர்களின் வாரிசுமாக விளங்குகின்ருர்; அத்துடன் உலகப் புரட்சியின் முன்னணி வீரராகவும் திகழ்கின்ருர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீனமக்

களும் உலகப் புரட்சியின் முன்னணியில் நின்றுகொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் நவீன திரிபுவாதத்திற்கும் எதிராகப் போராடுகின்றனர். மார்க்சிஸ — லெனினிஸத்தின் உண்மை வாரிசைத் தாக்கும் முதலாளி வர்க்கத்தினுல் உண்டாக்கப்படக் கூடிய இன்னல்களையிட்டு உண்மையான புரட்சி வாதிகள் அடிபணியக் கூடாது. உலகப் புரட்சியின் தலைவர்களைப் பற்றி கம்யூனிஸத்தின் துரோகிகளால் பரப்பப்படும் ஏமாற்று வதந்திகளையும் அவதூறுகளையும் கேட்டுக் கொண்டு போலந்து தொழிலாளி வர்க்கம் வாளாவிருக்க மாட்டாது; இந்த அரசியல் தகிடு தத்தங்களை அம்பலமாக்க இடையருது போராடும்.

### வர்க்கங்கள் இருக்கும்வரை வர்க்கப் போராட்டமும் இருக்கும்

கட்சியின் மூல-உபாயம் மிக முக்கியமானதாகும். அதுவே போராட்டத்தின் நோக்கத்தை தீர்மானிக்கின்றது. அதாவது, அரசியல் அதிகாரத்தைக் ...ட்டங்கள் அங்கு இல்லை எனவும் கூற மக்களின் எதிரிகளால் மாத்திரமே முடியும். நமது வளர்ச்சியின் தற்போதைய கட்டத்தில், புரட்சிகர சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும், பொருளாதார அடிப்படையிலும் மேற்தள அமைப்பிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாக்கவுமான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கட்சி வழிகாட்டியாக விளங்க வேண்டும். வர்க்கப் போராட்டத்தின் மூலம், உற்பத்தி, விநியோகம், பொருளாதார நிர்வாகம் என்பனவற்றின் உருவத்திலும் சாராம்சத்திலும் மாற்றமுண்டாகின்றது. வரலாறு கண்ட ஒவ்வொரு பொருளாதார அடித்தளமும் அதற்கிசைந்த மேற்தள அமைப்பைக் கொண்டுள்ளன. சகல விதமான மாற்றியமைத்தலையும் தொழிலாளி வர்க்கம் கண்காணிப்பதுடன், நிலவும் பொருளாதார அடிப்படை உயர்ந்த திறமையான வழிவகைகளை உற்பத்தியில் கையாள்வதன் மூலம் நஷ்டத்தையும், பழுதையும் இல்லாமற் செய்வதுடன், சகல துறைகளிலும் கம்யூனிஸத்தையும் நிர்மாணிப்பதற்கு சிறந்ததொரு முறையாகவும் ஆயுதமாகவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் விளங்குகின்றது. இது ஏனெனில், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் வர்க்கப் போராட்டம் கூர்மையடைவதால், சோஷலிஸ நிர்மாணத்தை வளர்ப்பதற்கும் பலமடையச் செய்வதற்குமான வர்க்கப் போராட்டத்தை ஒரு கணத்துக்கேனும் நடத்தாது விட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினுல் முடியாது. சகல துறைகளிலும், பொருளாதார அடிப்படையிலும், மேற்தள அமைப்பிலும் சோஷலிஸ நிர்மாணம் தொடர்ச்சியாக நடத்தப்படல் வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலையாக சீர் படுத்தப் படுவதுடன் உறுதியாக்கப்படவும் வேண்டும். அது எந்நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும், மாற்றத்திற்கிணங்க பாவிக்கப்படக் கூடியதாகவும், வர்க்க எதிரிகளின் எதிர்ப் புரட்சிகர நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

## பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

சமுதாயம் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸமாக மாறுகின்ற இடைக் காலத்தில் பல்வேறு அரசியல் உருவங்கள் தோன்றும். ஆனுல் அதன் சாரம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே. — லெனின்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான போராட்டமாகும். அரசியல் அதிகாரம் தொழிலாளர்களின் கைகளில் இருந்தால் மாத்திரமே தொழிலாளி வர்க்கம் அதன் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அப்பொழுது ஏற்கனவே பெற்ற அரசியல் அதிகாரத்தை போராட்டம் மூலம் உறுதியாக்கலாம்; இப்போராட்டம் பொருளாதார இலாகாக்களிலேயே அழுத்தமாகச் செய்யப்படல் வேண்டும்; இதை, உற்பத்தி சாதனங்களையும் வங்கிகளையும் தேசியமயமாக்குவதன் மூலமும், வெளிநாட்டு வர்த்தக ஏகபோகம், நிலச்சீர்திருத்தம், கூட்டுறவு மயப்படுத்தல் ஆகியவை மூலமும் செய்யலாம். இருந்தபோதிலும் சித்தாந்த விஞ்ஞான, கலாச்சார, கல்வி இலாகாக்கள் போன்ற மற்றும் துறைகளிலும் வர்க்கப் போராட்டம் நடைபெறத்தான் செய்யும். எனவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது, அதன் தலைமைப் பீடத்தை அரசியலிலும் பொருளாதாரத்திலும் மாத்திரம் வர்க்கப் போராட்டத்தைக் கொண்டு நடத்த விடக் கூடாது. ஏனெனில் சித்தாந்த, கலாச்சாரத் துறைகளிலும் வர்க்கப் போராட்டம் நடைபெறுகின்றது. சித்தாந்த, கலாச்சார துறைகளிலுள்ள முதலாளி வர்க்கத்தின் நிலைமைகளை நொறுக்கி, கைப்பற்ருவிட்டால் சோஷலிஸத்தை நிர்மாணிக்கவும், கம்யூனிஸத்துக்கான மாற்றத்திற்குத் தேவையான சூழலை உருவாக்கவும் முடியாது. இத்தகைய ஒரு புரட்சி தற்போது சீனுவில் நடைபெறுகின்றது.

உறுதியான போராட்டமின்மையும் மேற்தள அமைப்பைச் சுத்திகரிக்காமையும், சோவியத் யூனியனிலும், போலந்திலும், மற்றும் சோஷலிஸ நாடுகளிலும் முதலாளித்துவம் மீண்டும் புகுத்தப்படுதலுக்கு வழியமைத்து விட்டன. அரசு அதிகாரத்தையும் சொத்தையும் இழந்து விட்ட போதிலும், முதலாளி வர்க்கம் இன்னமும் சித்தாந்த, கலாச்சார, நிர்வாகத் துறைகளில் பலமுடையதாக உள்ளது. அவர்களிடம் இன்னும் பணம் உள்ளமையால் வெளிநாட்டு பிற்போக்குக் கும்பலுடன், தொடர்பு வைத்துள்ளனர். நமது நாட்டின் முதலாளி வர்க்கம், உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்காளர்களின் உதவியுடன் சதிகள், தகிடுதத்தங்கள் மூலம் அதன் அரசியல் அதிகாரத்தை மீண்டும் ஏற்படுத்த போராட முடியும்.

பல நெளிவு சுளிவுகள் மூலம் வர்க்கப் போராட்டம் வளர்ச்சியடைகின்றது. வர்க்க சமுதாயத்தில் நடைபெறும் போராட்ட அலையானது கட்சிக்குள்ளும் ஊடுருவி பிரதிபலிக்கின்றது. வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி, புரட்சிச் சக்திகளுக்கு சாதகமான சூழ்நிலை, உள்ளுக்குள் உண்டாகும் மாற்றங்கள் ஆகிய நிகழ்ச்சிகளினுல் கட்சிக்குள் ஏற்படும் பிரதிபலிப்பு காரணமாக தலைமைப் பீடம் எப்பொழுதுமே நடைமுறையுடன் தத்துவத்தை இணைத்து கட்சியின் புரட்சிகரக் கோட்பாட்டுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய சகலவற்றுக்கும் எதிராகப் போராட வேண்டியது அவசியமாகின்றது.

# ...க்சிஸம் நடைமுறைக்கான ...தையையும் வழி முறையையும் ...ந்துக் காட்டும் விஞ்ஞானமாகும்

கைப்பற்றவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாக்கி சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் கட்டியெழுப்பவும் அதுவே துணை புரிகின்றது. மூல-உபாய வேலையை நிறைவாக்க, வர்க்கப் போராட்டத்தில் ஏற்படும் நிலைமைகளுக்கேற்ப தந்திரோபாயம் கையாளப்படல் வேண்டும். வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் உள்ளது என போலந்து கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகின்றது. இயக்கங்களினதும், முன்னேற்றத்தினதும் உந்து சக்தி வர்க்கப் போராட்டமேயாகும். வர்க்க சமுதாயம் இருக்கும் வரையில் வர்க்கங்களும் இருக்கும். உலகம் முழுதாக மாற்றமடையும் வரை வர்க்க சமுதாயம் இருந்தே வரும். உலகம் முழுவதும் கம்யூனிஸ சமுதாயம் ஏற்படும் வரை வர்க்கப் போராட்டமும் இருந்தேவரும். வர்க்கங்களை ஒழித்து, வர்க்கங்களற்ற கம்யூனிஸ சமுதாயத்தை புரட்சிகரப் போராட்டங்கள் மூலம் கட்டியெழுப்ப வரலாற்றினுல் உண்டாக்கப்பட்ட ஒரேயொரு வர்க்கம் தொழிலாளி வர்க்கமேயாகும்.

சமுதாயம் அமைதியாக உள்ளது எனவும், வர்க்கப் போராட்டங்கள் அங்கு இல்லை...

...லும் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மென் மேலும் உற்பத்தியை அதிகரிக்கின்றது. இந்தக் குறிக்கோள்கள் யாவும் தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரே செய்ய முடியும். எனவே புரட்சிகரப் போராட்டம் முழுவதிலுமுள்ள முக்கிய பிரச்சினை தொழிலாளி வர்க்கத்தினுல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுவதேயாகும். வர்க்க நடவடிக்கையின் ஒவ்வொரு விளக்கத்திலும் அரசியல் காணப்படுகின்றது. எனவே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான போராட்டம் என்னும் பொது அலைகளுள் தீரமுடன் குதித்தல் வேண்டும்.

### பாட்டாளி வர்க்க சமுதாயத்தின் அவசியம்

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்ட காலகட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதே நோக்கமாகும்; அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், வர்க்க சமுதாயத்தை இல்லாதொழித்து சோஷலிஸத்தையும் கம்...

தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற புரட்சிகர மார்க்கமே உதவி செய்யும், போராட்ட வழிகள் வேறுபடலாம். ஆனுல் அவற்றின் புரட்சிகர அம்சம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகும். நடைமுறைக்கான வழிகாட்டியாக வர்க்கப் போராட்டத்தைஏற்றுக்கொண்ட கட்சி, புரட்சிகர மாற்றங்களைகொண்டுவருவதுடன், புரட்சிகர நடவடிக்கையும் ஆயுத எழுச்சியும் கொண்ட மார்க்கத்தினுல் அரசியல் அதிகாரத்தை மக்கள் கைப்பற்ற வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணரும்படி செய்தல் வேண்டும்.

### சித்தாந்த, கலாச்சாரத் துறைகளிலும் போராட்டம் அவசியம்

ஒரே சமயத்தில் சகல துறைகளிலும் வர்க்கப் போராட்டம் நடைபெறுகின்றது, ஆனுல் எப்பொழுதுமே போராட்டத்தில் பிரதான தொடர்பு உள்ளது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தற்போதைய போராட்டத்தில் இப்பிரதான தொடர்பு அரசியல் போராட்டமாகும். அதாவது...

### கட்சியின் தூண்கள்

போராட்டத்தின் எந்தச் சூழ்நிலைகளிலும் ஏற்படக் கூடிய கஷ்டங்களை வெல்ல கட்சி வெகுஜனங்களுடன் முக்கியமாக தொழிலாளர் வெகுஜனங்களுடன் நிலையான தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பதுதான் போலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படை வேலையாகும். தொழிலாளி வர்க்கத்திடமிருந்து விலகியிருக்கும் ஒரு அரசியல் கட்சி ஒரு புரட்சிகரக் கட்சியாக இருக்க முடியாது.

8-ம் பக்கம் பார்க்க

# சீர்திருத்த நடவடிக்கைகளால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது

◎ 7-ம் பக்கத் தொடர்

முழுத் தொழிலாளி வர்க்கத்தினதும் அனுதாபத்தை வென்றெடுக்கப் போராடும் அதே நேரத்தில், நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள நேச சக்திகளை உடனடியாக அணிதிரட்டி அவற்றை தொழிலாளி வர்க்கத்தின் பின்னால் ஒன்றுசேர்க்க வேண்டும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே ஒற்றுமையில்லை எனில், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதோ, அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாக்குவதோ முடியாத காரியமாகும். கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு இடையே ஏழை விவசாயிகளும், அரைப் பாட்டாளிகளுமே கட்சியின் தூண்களாவர். இதுவே நடுத்தர விவசாயிகளுடன் ஒற்றுமையை உண்டாக்குவதற்கான போராட்டத்திற்கும், ஏற்கனவே வென்றெடுத்த அரசியல் அதிகாரத்தை உறுதியாக்கவும், விவசாயத்தை மாற்றியமைக்கவுமான தொழிலாளி வர்க்கத்தின் சமூக—அரசியல் அத்திவாரமாகும். கிராமப்புறத்தை வென்றெடுக்காது தொழிலாளி வர்க்கத்தினால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது.

## கட்சியின் முழு முதல்வேலை

புத்திஜீவிகளை தொழிலாளி வர்க்கத்தின் அணிக்கு வென்றெடுத்து அவர்களையும் போராட்டத்தில் ஈடுபடச் செய்ய போலந்து கம்யூனிஸ்ட் கட்சி முயற்சி எடுக்கின்றது. போலந்திலுள்ள புரட்சிகர புத்திஜீவிகள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மிகவும் சிருஷ்டிகரமான, முற்போக்கான புரட்சிகரப் பங்கை வகிக்க வேண்டும்.

வெகுஜனங்களுடன், அதாவது தொழிலாளி வர்க்கத்துடனும், உழைக்கும் விவசாயி வர்க்கத்துடனும், புரட்சிகர புத்திஜீவிகளுடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தொழிலாளி வர்க்கத்தினால் முடியும். கட்சி முதலில் முழு தொழிலாளி வர்க்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திய பின்னர் நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள உழைக்கும் வெகுஜனங்களுடன் தொடர்பு வைக்க வேண்டும். வெகுஜனங்களை அவர்களது போராட்டங்களில் எழுச்சியுறச் செய்வதும், போராட்டங்களை பெரிதாக விரிவுபடுத்துவதும், இப்போராட்டங்களை பெரும் புரட்சி அலைகளுடன் ஒன்றுசேர்ப்பதுமே கட்சியின் முழு முதல் வேலையாகும்.

போலந்து கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த மத்தியத்துவத்தைக் கொண்ட ஒரு கட்சியாகும். அன்றாட நடைமுறைகளில் கட்சியின் அடிப்படை குணாம்சங்கள் என்னவெனில், ஜனநாயக மத்தியத்துவமும், கடும் ஒழுங்குமுறை பற்றிய அங்கத்தவர்களின் உணர்வுமே ஆகும். நடைமுறையில் உள்ள இவ்வொற்றுமையினாலேயே கட்சியின் பலமும், போர்த் திறனும் தீர்மானிக்கப்படுகின்றன.

## கம்யூனிஸப் பாதை

ஆயுத பலத்தினால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை விட வேறு மார்க்கம் இல்லையென்ற உண்மையை தொழிலாளி வர்க்கமும் பரந்த வெகுஜனங்களும் உணரச் செய்வதே நாளாந்த போராட்டத்தில் பிரதான வேலையாகும். எனவே எல்லா பிரச்சாரங்களும், கிளர்ச்சி வேலைகளும் புரட்சிகர உணர்வு பதிந்தனவாக இருக்க வேண்டும். சீர்திருத்த நடவடிக்கைகளால் இழந்த அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. கடைசிக் கட்டத்தில் ஆயுத எழுச்சியுடன் கூடிய புரட்சிகர போராட்டமே தொழிலாளி வர்க்கத்தை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும். இழந்த அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற, ஆரம்பத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற உதவியது போன்ற புரட்சிகர போராட்டத்தை நடாத்துவது அத்தியாவசியமாகும்.

தற்போது எமது நாட்டில் துரோகம் வாய்ந்த அதிகாரத்துவ வர்க்க சர்வாதிகாரம்-முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் நடைமுறையில் உள்ளது. புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் மாத்திரமே அதனைத் தூக்கி எறிய முடியும்.

-தொடரும்

◎ 5-ம் பக்கத் தொடர்

தலைமையில், தாய்லாந்து அரசாங்கத்தின் கொடிய ஆட்சிக்கெதிரான, மக்களது ஆயுதப் போராட்டம் நாட்டின் எழுபத்தொரு மாகாணங்களில் முப்பது மாகாணங்களுக்குப் பரவியது. அமெரிக்க ஆயுதங்களுடன் அமெரிக்க தளபதிகளின் தலைமையில் தாய். பிற்போக்குத் துருப்பினராலும், பொலிஸினாலும் நடாத்தப்பட்ட ''சுற்றிவளைத்தலும் நசுக்குதலும்'' இயக்கம் அடித்து நொறுக்கப்பட்டது.

தனது வீழ்ச்சியைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தானம்—பிரபாஸ் அரசாங்கம், அதற்கு ''இராணுவ உதவி'' அளிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடனான உறவை மேலும் பலப்படுத்தியது. இதற்கு கைமாறாக அது அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுடன் ஒத்துழைக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஒரு லட்சம் துருப்புகளை தாய்லாந்துக்கு அனுப்பியதுடன், பல ராணுவத் தளங்களையும் அமைத்துள்ளனர். லாவோசுக்கும், வியட்நாமுக்கும் வருங்காலத்தில் சீனாவுக்கும், எதிராக ஆக்கிரமிப்பு நடத்த அது பல விமானத் தளங்களையும் அமைத்துள்ளது. வட வியட்நாம் மீது குண்டு பொழியும் விமானங்களில் 80 சத விகிதமானவை தாய்லாந்து விமானத் தளத்தைச் சேர்ந்தவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புகள் தாய்லாந்து மக்களை பலவகையிலும் இம்சைப்படுத்துவதுடன் மக்களது ஆயுதப் போராட்டத்தை நசுக்கவும் தாய்லாந்து அரசாங்கத்துக்கு உதவி புரிகின்றன. இவை யாவும் உள்நாட்டு, வெளிநாட்டு பிற்போக்காளர்களுக்கெதிரான மக்களது ஆயுதப் போராட்டத்தை மேலும் உக்கிரப்படுத்தவே உதவுகின்றன.

மக்கள் ஆயுதப் போராட்டத்திற்கு தலைமைதாங்கும் தாய்லாந்து கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் மாஓவினால் வகுக்கப்பட்ட, நாட்டுப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களை சுற்றிவளைத்து, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்ற புரட்சிகரக் கோட்பாட்டையே கடைப்பிடிக்கின்றது. அது, ஆயுதப் போராட்டத்தை எதிர்க்கும் சோவியத் நவீன திரிபுவாதத்தை எதிர்ப்பதுடன், ''அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழாயிலிருந்தே பிறக்கின்றது'' என்ற தலைவர் மாஓவின் மணிவாசகத்திற்கிணங்க செயலாற்றுகின்றது.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே தாய்லாந்து கம்யூனிஸ்ட் கட்சி போர் வீரர்களை மா சே-துங் சிந்தனையால் ஆயுதபாணிகளாக்கி அவர்களை வர்க்க நெறியில் வளர்த்தெடுப்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளது. அதன் பலனாக பல கஷ்டங்களின் மத்தியிலும் போர்வீரர்களின் தார்மீக உணர்வு உயர்ந்து விளங்குகின்றது.

தலைவர் மாஓ கூறுகின்றார்: ''புரட்சிகர யுத்தமானது வெகுஜனங்களின் யுத்தமாகும். வெகுஜனங்களை அணிதிரட்டி அவர்கள் மீது நம்பிக்கை வைப்பதன் மூலமே அதனை நடத்தலாம்.'' தாய்லாந்து மக்கள் படையினர் வெகுஜன வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து, விவசாய வெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். அவர்களது ''ஆயுதந் தாங்கிய வேலைக்குழுக்கள்'' ''ஆயுதந் தாங்கிய பிரச்சாரக் குழுக்கள்'' இரண்டும் நாட்டுப் புறங்களில் செயலாற்றுவதுடன் துரோகிகளை நசுக்குவதற்கு விவசாயிகளுக்கு உதவி புரிகின்றன. அதன் மூலம் வெகுஜனங்களின் இதயபூர்வமான ஆதரவை வென்றெடுக்கின்றன.

தலைவர் மாஓவின் மக்கள் யுத்தம் சம்பந்தமான மூல—உபாயம் தந்திரோபாயம் ஆகியவற்றைச் சிருஷ்டிகரமாகக் கற்று கையாள்வதன் மூலம் தம்மிலும் பலம் வாய்ந்த எதிரியின் படைப் பிரிவுகளை அழித்து தமது படைப் பிரிவுகளை பெருக்கிக் கொள்கின்றனர்.

பூர்த்தியடையாத புள்ளி விபரங்களின்படி 1100 தடவைகள் நடைபெற்ற கைகலப்புகளில் மக்கள் ஆயுதப் படையினர் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் உட்பட 2400-க்கும் மேற்பட்ட எதிரித் துருப்புகளை துடைத்தெறிந்துள்ளனர். ஜூலை 26-ந் திகதி அமெரிக்க யூடோன் விமானத் தளத்தை தாக்கி, பல விமானங்களையும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் பலரையும் அழித்துள்ளனர்.

வளர்ந்து வரும் தாய்லாந்து மக்கள் போராட்டத்தைக் கண்டு அதிர்ச்சியுற்ற அமெரிக்க பத்திரிகைகள், தாய்லாந்து ''இரண்டாவது வியட்நாமாக'' மாறக் கூடும் எனவும், தாய்லாந்தில் வளர்ந்து வரும் கொரில்லா யுத்தம், வியட்நாம் மீதான யுத்தத்தை விஸ்தரித்து, சீனாவைச் சுற்றிவளைப்பதென்ற அமெரிக்காவின் தந்திரோபாயத் திட்டத்தை தலைகீழாக்கிவிடும் எனவும் அச்சம் தெரிவித்துள்ளன.

◎

## இந்தோனேசியா

1965 சுகார்ட்டோ-நசூடியன் பாசிஸ்ட் இராணுவ கும்பல் ஒரு சதியை நடத்தியது, அதைத் தொடர்ந்து பல லட்சக் கணக்கான கம்யூனிஸ்ட்டுகளும் புரட்சியாளர்களும் படுகொலை செய்யப்பட்டதுடன் பல லட்சக் கணக்கானோர் சிறையிலிடப்பட்டனர். இதன் மூலம் இந்தோனேசிய பிற்போக்காளர் யக்களது உணர்வைத் தட்டியெழுப்பி விட்டனர்.

கட்சியின் தலைமைப் பீடத்தில் பின்பற்றப்பட்ட வலதுசாரிச் சந்தர்ப்பவாதத் தவறுகளை கடுமையாக விமர்சித்த இந்தோனேசிய கம்யூனிஸ்டுகள், மார்க்சிஸம்-லெனினிஸம் மா சே-துங் சிந்தனையின் கீழ் இந்தோனேசியப் புரட்சியை முன்னெடுத்திச் செல்கின்றனர் இரத்தத்தினால் விலை கொடுக்கப்பட்ட பாடங்கள் மூலம் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற் குழு சுய—விமர்சன ரீதியில் பின்வரும் முடிவை எடுத்துள்ளது. ''பூரண வெற்றியை வென்றெடுக்க இந்தோனேஷியப் புரட்சி சீனப் புரட்சி சென்ற பாதையிலேயே செல்ல வேண்டும். அதன் அர்த்தம், ஆயுதந் தரித்த எதிர்-புரட்சியை தோற்கடிக்க மக்கள் ஆயுதப் போராட்டப் பாதையையே கைக்கொள்ள வேண்டும்; சாராம்சத்தில் இதன் அர்த்தம் என்னவெனில், பாட்டாளி வர்க்க தலைமையின் கீழ் ஆயுதந் தரித்த விவசாயப் புரட்சி என்பதாகும்.''

இந்தோனேசிய பிற்போக்கு பத்திரிகைகளின் கூற்றுப்படி இந்தோனேசிய கம்யூனிஸ்டுகள் நகரப் புறங்களிலிருந்து, நாட்டுப் புறங்களுக்குச் சென்று விவசாயிகளை எழுச்சியுறச் செய்வதுடன் புரட்சிகர ஆயுதப் படைகளையும், தளங்களையும் ஸ்தாபித்துள்ளதாக அறிய முடிகின்றது.

புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் சுவாலைகள் பெருந்தீவுகளான ஜாவா, சுமத்திரா, சுலவெசி ஆகிய இடங்களுக்கு பரவியுள்ளது. ஜாவாவிலும் மேற்கு களிமன்டானிலும் மக்கள் ஆயுதப் படையினர் மலைப் புறங்களில் தளங்களை நிறுவியுள்ளதாக இந்தோனேசிய பிற்போக்கு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. அவர்கள் மக்களை எழுச்சியுறச் செய்து, அவர்களுக்கு அரசியல் கல்வியும் இராணுவப் பயிற்சியும் அளித்து எதிரியை எதிர்த்து போராட அவர்களது ஆதரவில் தங்கியுள்ளனர். மக்களது ஆதரவு மூலம் மக்கள் ஆயுதப் படைகள் வளர்ச்சி பெற்று பிற்போக்குத் துருப்பினர்க்கு அடிக்கு மேல் அடி கொடுக்கின்றனர்.

''90 சத வீதமான மக்கள்'' மக்கள் படையினை ஆதரித்தபடியால் கிழக்கு ஜாவாவில் நடாத்தப்பட்ட சுற்றிவளைத்தலிலும் நசுக்குதலிலும் இந்தோனேசியப் பிற்போக்குப் படைகள் பலத்த சேதத்துக்குள்ளாயின என்று மேற்கத்திய பத்திரிகை ஸ்தாபனமொன்று தெரிவித்துள்ளது. மக்களது உதவியுடன் மக்கள் படையினர் நிலத்துக்குக் கீழ் பல சுரங்கப் பாதைகளை அமைத்துள்ளமையினால் கம்யூனிஸ்டுகள் திடீர் திடீரென மறைந்து விடுகின்றனர் என அச் செய்தி மேலும் கூறியது.

தலைவர் மாஓ கூறுகிறார்: ''நாம் மக்களில் தங்கி நின்று வெகு ஜனங்களின் எல்லையற்ற சிருஷ்டி சக்தியை திடமாக நம்பியும், அவர்களில் நம்பிக்கை கொண்டும் அவர்களோடு எம்மை ஒன்றாகக் காணும்வரை நாம் நிச்சயமாக எந்தக் கஷ்டத்தையும் கடக்க முடியும் எந்த விரோதியாலும் எம்மை நசுக்க முடியாது; எந்த விரோதியையும் எம்மால் நசுக்க முடியும். என்பதைப் புரிந்து கொள்ள ஒவ்வொரு தோழருக்கும் உதவி தரப்பட வேண்டும்.''

அவர்களது போராட்டத்தில் முன்னேறும் அதே வேளையில் இந்தோனேசிய மக்கள் படையினர் பல கஷ்டங்களையும் எதிர்நோக்குகின்றனர். எப்படியிருந்த போதிலும் கோடிக் கணக்கான இந்தோனேசிய மக்கள் மீது நம்பிக்கை வைப்பதன் மூலம் புரட்சியை முன்னெடுத்துச் சென்று இறுதி வெற்றியை அடைவோம் என்று திட நம்பிக்கை பூண்டுள்ளனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது மத்திய கமிட்டியின் 12வது விரிவடைந்த கூட்டம் வெளியிட்டுள்ள அறிக்கை பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சென்ற இதழில் பிரசுரிக்கப்பட்ட இவ் அறிக்கையின் தொடர்ச்சியை இங்கு வெளியிடுகின்ரும்.

—ஆசிரியர்

ஆகியவை சம்பந்தமான தலைவர் மா ஓவின் அறிவுரைகளை உணர்வுடன் செயற்படுத்துவதும் அவசியமாகும்.

தொழிற்சாலைகளிலும், மக்கள் கம்யூன்களிலும். கட்சியிலும், அரசாங்க நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும், மற்றும் சகல நிறுவனங்களிலும் வர்க்க நிலைகளை சீர்திருத்தும் வேலையை உணர்வுடன் நடத்தவும், மக்களிடையே மறைந்துள்ள ஒரு சில எதிர்—புரட்சியாளர்களை அம்பலப்படுத்தவும் நாம் தொடர்ந்தும் மக்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும்.

றுலும், மீண்டும் கற்பிக்கப்படல் வேண்டும். தொழிலாளர்களது பிரச்சாரக் குழுக்கள் நிலையாக பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் தங்கியிருந்து, போராட்டம்-விமர்சனம்—மாற்றம் ஆகியவற்றின் பணிகளில் பங்கு பற்றி எப்போதும் இந் நிலையங்களுக்குத் தலைமை அளிக்க வேண்டும். நாட்டுப் புறத்தில், தொழிலாளி வர்க்கத்தின் மிக நம்பிக்கையுள்ள நேச அணியான வறிய—கீழ்-நடுத்தர விவசாயிகளினுல் பாடசாலைகளும் கல்லூரிகளும் நிர்வகிக்கப் படல் வேண்டும். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை இறுதி வரை நடத்தி முடிப்பதற்கு

**அரசியல் அதிகாரம் தொழிலாளர்களின் கைகளில் இருந்தால் மட்டுமே தொழிலாளி வர்க்கம் அதன் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.**

# ஒடுக்கப்படும் சகல மக்களும் ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை அமைக்க வேண்டும்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நிறுத்த கலாச்சாரத் துறைகள் உட்பட சகல மேல்மட்ட அமைப்பு ஒவ்வொன்றிலும் தொழிலாளி வர்க்கம் தலைமை வகிக்க வேண் வேண்டும் என்ற தலைவர் மா ஓ வின் படிப்பினையைச் செயலாக்குமாறும், தலைவர் மா ஓ விஞல் முன்வைக்கப்பட்ட போராட்டம் — விமர்சனம்— மாற்றம் என்பவற்றின் சகல கட்டங்களினதும் பணிகளை நிறைவேற்றுமாறும், மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை இறுதி வரை நடத்துமாறும், எட்டாவது மத்திய கமிட்டியின் 12 வது விரிவடைந்த கூட்டம் சகல தொழிலாளர்களையும், வறிய, கீழ்-நடுத்தர விவசாயிகளையும், மக்கள் விடுதலைச் சேனையின் தளபதிகளையும், போராளிகளையும், புரட்சிகர இயங்குனர்களையும் புரட்சிகர செங்காவலர்களையும், புரட்சிகர புத்தி ஜீவிகளையும், சகல இனங்களையும் சேர்ந்த புரட்சிகர மக்களையும் அறைகூவுகின்றது. புதிதாகத் தோன்றிய புரட்சிகரக் கமிட்டிகள் வெகு ஜனங்களுடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தச் செய்வதற்கும், அவை என்றும் உறுதியாகவும் வளர்ச்சியும் முன்னேற்றமும் உடையனவாகவும் இருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வேலைகளை இன்னும் நன்ருக ஆற்றச் செய்வதற்கும், நாம் தொடர்ந்தும், மகத்தான புரட்சிகர இணைவும், ஒன்றில் மூன்று சேர்க்கையும் பற்றிய தலைவர் மா ஓ வின் மாபெரும் தத்துவத்தை தொடர்ந்து நடத்துவது, புரட்சிகர வெகு ஜன விமர்சனமும் நிராகரித்தலும் நடத்துவது, நிர்வாக அமைப்பை சுருக்குவது, இயங்குனர்கள் உடல் உழைப்பில் ஈடுபடுதல், ஊறுவிளைவிக்கும் சட்ட திட்டங்களை மாற்றுதல்

பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினரைக் கொண்டுள்ளதாகக் கட்சி அமைப்பு இருத்தல் வேண்டும். அது வர்க்க எதிரிக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கும், புரட்சிகர வெகு ஜனங்களுக்கும் தலைமை அளிக்கக் கூடியதான முன்னணி அமைப்பாக இருத்தல் வேண்டும் என்ற தலைவர் மா ஓவின் போதனையை நாம் கைக்கொள்ள வேண்டும்; பழயவையை நீக்கி புதியவையை எடுத்தல் ''என்பது பற்றிய தலைவர் மா ஓவின் வழி காட்டலை நாம் செயற்படுத்த வேண்டும்; கட்சியை உறுதியாக்குவதும் நிர்மாணிப்பதுமான வேலையை உணர்வுடன் செய்து, கட்சிக்குள் நுழைந்துவிட்ட — நிருபிக்கப்பட்ட துரோகிகளையும், எதிரிகளின் கைக்கூலிகளையும், முதலாளித்துவ பாதையினரையும், சீரழிந்த சகல வர்க்கத்தினரையும் கட்சியிலிருந்து நீக்கி, பாட்டாளி வர்க்கத்திலிருந்து புது இரத்தத்தைக் கட்சிக்குச் சேர்க்க வேண்டும்—எல்லாவற்றுக்கும் மேலாக, கைத்தொழில் தொழிலாளர்களிடையே உள்ள முன்னேறிய கம்யூனிஸ உணர்வு மிக்க பகுதியினரை எடுக்க வேண்டும். கட்சியின் தலைமைப் பதவிகளை வகிக்க தலைவர் மா ஓவின் பாட்டாளி வர்க்க புரட்சிகர நெறியைச் செயலாக்குவதில் மிக உறுதியான திறமை மிக்க கட்சி அங்கத்தவர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

கல்லூரியில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மாபெரும் வரலாற்றுப் பணியை நாம் பூரணமாக்க வேண்டும் புத்திஜீவிகளைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடனும் விவசாயிகளுடனும் அவர்கள் ஒன்றிணையும் விதத்தில் அவர்கள் தொழிலாளர்களினுலும் விவசாயிகளினுலும், படைவீரர்களி

இது ஒரு மிக முக்கியம் வாய்ந்த நிபந்தனையாகும். இப் புகழ் வாய்ந்த பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், வறிய கீழ்—நடுத்தர விவசாயிகளும், மக்கள் விடுதலைச் சேனையின் தளபதிகளும் போராளிகளும் போராட்ட கட்டத்தில் தமது அரசியல் உணர்வை நிரந்தரமாக உயர்த்த வேண்டும்.

நாம் புரட்சியைக் கிரகிக்கவும், உற்பத்தி, மற்றும் வேலைகளையும் யுத்தத்துக்கு எதிரான ஆயத்தத்தையும் உயர்த்தவும் வேண்டும், நமது நாட்டில் சோஷலிஸ கைத்தொழில், சோஷலிஸ விவசாயம், மற்றும் சோஷலிஸ வேலைகளையும் நிர்மாணிக்கும் பணியை மேலும் நன்ருக செய்ய வேண்டும். நமது நாட்டில் சோஷலிஸ உற்பத்தி பெருகுவதற்கு மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி ஒரு உந்து சக்தியாக விளங்குகின்றது. அது சோஷலிஸ நிர்மாணத்தில் புதியதொரு வேகத்தை உருவாக்குகின்றது; தொடர்ந்தும் உருவாக்கும்.

## உலகப் புரட்சி புதிய சகாப்தத்துள் பிரவேசிக்கின்றது

நாம் சீன மக்கள் விடுதலைச் சேனையை பலப்படுத்த வேண்டும்; தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். படையை ஆதரிப்பதிலும் மக்களை அன்புடன் நடத்துவதிலும் சிறந்த பணியை ஆற்றவேண்டும். நாம் தைவானை விடுதலையாக்க உறுதியெடுத்துள்ளோம். சுரண்டும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும் சோவியத் நவீன திரிபுவாத துரோகக் கும்பலுக்கும் எதிராக நாம் எமது விழிப்புணர்வை ஆயிரம் மடங்கு வளர்க்க வேண்டும். எதிரி எம்மீது யுத்தம் தொடங்க துணிவானேயாஞல் நாம் அவனை தீரமுடன் சம்பூர்ணமாக துடைத்தெறிவோம்.

தோழர் மா சே-துங் குறிப்பிட்டுள்ளது போல உலகப் புரட்சி மாபெரும் புதிய சகாப்தத்துடன் பிரவேசித்துள்ளது என இக்கூட்டம் கருதுகின்றது. சகல நாடுகளிலுமுள்ள மக்களது புரட்சிகர இயக்கம் தீவிரமாக வளர்ந்து வருகின்றது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள முரண்பாடுகளில் மூழ்கித் தத்தளிக்கும், அமெரிக்காவிஞல் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்திய வாதிகளும் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலிஞல் தலைமை தாங்கப்படும் நவீன திரிபுவாதிகளும் சீரழிந்து போவதுடன், செல்வாக்கை இழந்து முன்னெப்போதையும் விட தனிமைப்பட்டு வருகின்றனர்.

ஒத்துழைப்புடன், ஒருவருடன் ஒருவர் போராட்டத்தையும் நடத்தும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும், சோவியத் திரிபுவாதிகளும் உலகை மீண்டும் பங்குபோட வீண் முயற்சி எடுக்கின்றனர். வியட்நாம் மீதான தமது ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் சோவியத் திரிபுவாதிகளின் மறைமுக ஆதரவைப் பெறுகின்றனர்; அதற்கு பிரதி உபகாரமாக, செக்கோஸ்லவாக்கியாவுக்கு தமது துருப்புகளை அனுப்பி ஆக்கிரமிப்பு நடாத்துவதில் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் மறைமுக ஆதரவைப் பெறுகின்றனர். அவர்களது கேடுகெட்ட அரசியல் பேரம் உலக மக்களின் முன் முற்ருக அம்பலப்படுத்தப்பட்டுவிட்டது. அவர்களது வெட்ட வெளிச்சமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள், ஏகாதிபத்திய கூட்டுக்குள்ளும் திரிபுவாதக் கூட்டுக்குள்ளும் உள் முரண்பாடுகளை ஆழமாக்கியுள்ளதுடன், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளினதும் சோவியத் திரிபுவாதிகளினதும் நாடுகளில் உள்ள ஒடுக்கப்படும் மக்களின் அரசியல் உணர்வையும் வளர்த்துள்ளன. அதே நேரத்தில் அவை அமெரிக்க ஏகாதிபத்திற்கும் சோவியத் திரிபுவாதத்திற்கும் எதிராக உலக பாட்டாளிகளினதும் மக்களினதும் போராட்டத்திற்கு மிகப் பெரும் உத்வேகத்தையும் ஊட்டியுள்ளன. போராட்டப் பாதை எவ்வளவு கரடுமுரடான தென்ருலும் பரவாயில்லை, அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் சோவியத் திரிபுவாதிகளும் சீன—எதிர்ப்பு, எதிர்ப்-புரட்சுகர ''பரிசுத்த அணி''யை ஏற்படுத்த எத்தகைய குப்பை கூளங்களை சேகரித்தாலும் பரவாயில்லை, அவர்கள் தவிர்க்க முடியாதபடி ''தமது சொந்தக் கால்களிலே போட்டுக் கொள்ளவே கல்லைத் தூக்குகின்றனர்.'' நாம் எப்போதுமே தனித்திருக்கவில்லை; புரட்சியை விரும்பும் உலக ஜனத்தொகையில் 90 வீதமானேர் நமது நண்பர்களாக உள்ளனர். வரலாற்றுச் சக்கரத்தை நிச்சயமாகத் திருப்ப முடியாது; ஏகாதிபத்தியமும் திரிபுவாதமும் சகல விதமான பிற்போக்குச் சக்திகளும் புரட்சிகர மக்களிஞல் உடைத்தெறியப்படுவர்; உலகின் ஒடுக்கப்படும் மக்களும் ஒடுக்கப்படும் நாடுகளும் தமது போராட்டத்தின் மூலம் கட்டாயம் பூரண விடுதலை பெறுவர்.

## பிற்போக்காளர்கள் பீதிகொள்வர்

தோழர் மா சே-துங்கின் தலைமையில் உள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீன மக்களும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவ கோட்பாடுகளையும் கொள்கைகளையும் என்றும் கடைப்பிடித்து சகல நாடுகளிலுமுள்ள உண்மையான மார்க்சிஸ்—லெனினிஸ்டுகளுடன் ஐக்கியப்படுவதுடன், ஏகாதிபத்தியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் எதிரான வீரமிக்க அல்பேனிய மக்களின் போராட்டத்தையும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிரானதும் தேசிய விமோசனத்திற்குமான வீரமிக்க வியட்நாம் மக்களது எதிர்ப்பு யுத்தத்தையும், ஏகாதிபத்தியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் மற்றும் பிற்போக்கிற்கும் எதிரான உலகின் சகல மக்களதும் போராட்டங்களையும் உறுதியாக ஆதரிக்கின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியமும் சோவியத் திரிபுவாதமும் உலகை ஆதிக்கஞ் செலுத்தக் கையாளும் சூழ்ச்சிகள் யாவற்றையும் உடைத்தெறிந்து, வெற்றியையும் விடுதலையையும் சீக்கிரம் வென்றெடுக்க, அமெரிக்க ஏகாதிபத்தியத்திஞலும், சோவியத் திரிபுவாதத்திஞலும் அவர்களது அடிவருடிகளிஞலும் ஒடுக்கப்படும் சகல மக்களும் ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை அமைக்கவேண்டும் எனச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகின்றது.

இக் கூட்டம் ஒரு அற்புதமான உள்நாட்டு, சர்வதேச நிலைமையில் நடாத்தப்பட்டது. இது மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் பரந்த வெற்றியை ஈட்ட அணிதிரளும் ஒரு கூட்டமாகும். தலைவர் மாஓவைத் தலைவராகக் கொண்டதும் உபதலைவர் லின்பியை உபதலைவராகக் கொண்டதுமான பாட்டாளி வர்க்க தலைமை நிலையத்தின் கீழுள்ள கட்சி முழுவதினதும் என்றும் காணப்படாத ஐக்கியத்தை வெளிக்காட்டும் கூட்டமாகும்; பாட்டாளி வர்க்க புரட்சிகரப் புத்துயிர் நிரம்பிய கூட்டமாகும். கட்சியின் சகல தோழர்களும், நாட்டின் சகல மக்களும் உலகின் சகல புரட்சிகர மக்களும் இக் கூட்டத்தின் வெற்றியையிட்டு புளகாங்கிதமடைவர் எனவும், சிறிய அளவினரான அமெரிக்க ஏகாதிபத்தியத்திஞல் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்திய வாதிகளும், சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலிஞல் தலைமைதாங்கப்படும் நவீன திரிபுவாதிகளும் உள்நாட்டு வெளிநாட்டு சகல பிற்போக்கு வாதிகளும் பீதி கொள்வர் எனவும் இக் கூட்டம் நம்புகின்றது.

எமது மகத்தான தலைவர் மாஓவை நெருக்கமுடன் பின்பற்றி, வீரமுடன் முன்செல்வோம்! வெற்றி நமதே!

# பல்கலைக் கழக மாணவர்கள் கிளர்ந்தெழ வேண்டும்

**இந்நாட்டுப் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளையொட்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசனும், இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் தோழர் வாட்சன் பெர்னாண்டோவும், செங்கொடி வாலிபர் சங்க சம்மேளனத்தின் தலைவர் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா எம். பி. யும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கு பிரசுரிக்கின்றோம்.**

—ஆசிரியர்

இந்நாட்டு பல்கலைக் கழக நிர்வாகம் இதுவரை இல்லாத முறையில் பல்கலைக் கழக மாணவர்களை மிகத் தரக்குறைவாக, இழிவாக நடத்தியுள்ளது.

பல்கலைக் கழக நிர்வாகிகளின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் அறுவர் கைது செய்யப்பட்டு ரிமாண்டில்வைக்கப்பட்டுள்ளது அருவருக்கத்தக்க நிகழ்ச்சி. இதற்குமுன் என்றுமே நடைபெறாத சம்பவம் இது. அந்த மாணவர்கள் செய்த குற்றம் என்னவென்றால், தமது குறைகளை பல்கலைக் கழக நிர்வாகத்தினருக்கு எடுத்துரைப்பதற்காக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்ததுதான். இந்த விதமான எதிர்ப்புத் தெரிவித்தல், மிகவும் சமாதானமாக நடைபெற்றது. அத்துடன் அது அவர்களின் உரிமையும்கூட. இவ்விதமான போராட்டம் இதற்கு முன்னும், நடத்தப்பட்டுள்ளது. இது நிர்வாகிகளுக்கு எதுவித இடைஞ்சலையும் கொடுக்கக்கூடியதல்ல. எனினும், இப் போராட்டத்தை நசுக்குவதற்கு இதற்கு முன் எப்போதுமில்லாத முறையில் முதல் முறையாக நிர்வாகிகள் அடக்குமுறையில் ஈடுபட்டுள்ளார்கள்.

கொழும்பு பல்கலைக் கழகம் 83 மாணவர்களையும், பேராதனை பல்கலைக் கழகம் 55 மாணவர்களையும் பல்கலைக் கழக பிரவேசத்திற்கு தகுதியான பாடங்களில் சித்தி பெறவில்லையென்ற குற்றச் சாட்டில் தொடர்ந்து படிக்க அனுமதி மறுத்து வெளியேற்றியுள்ளன. இதற்கு முன் கேள்விப்படாத முறையில் இந்த வகையில் நிலைமை மோசமாவதற்கு யார் பொறுப்பு? நிச்சயமாக இது மாணவர்களின் தவறல்ல, இத் தவறுகளுக்கு யார் பொறுப்பு என ஆலோசித்தால். தரமான கல்விக்குப் பதிலாக கம்யூனிஸ ஒழிப்பு நோக்கத்தில் கல்வி அமைச்சரால் அமைக்கப்பட்ட தேசிய உயர் கல்வி சபைதான் காரணம். யாராவது வெளியேற்றப்பட வேண்டுமென்றால் உண்மையில் கல்வி அமைச்சரையும், தேசிய உயர் கல்வி சபையையும்தான் வெளியேற்றவேண்டும். பல்கலைக் கழகத்திற்குள் பிரவேசிக்க அனுமதித்துவிட்டு அவர்களை வெளியேற்றியதினால் அம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலையும், கௌரவக் குறைவையும் யாராலும் எடுத்துக் கூற முடியாது.

பல்கலைக் கழக மாணவர்களுக்கு வேறு பல பிரச்சினைகளும் உள்ளன. அத்தோடு இந் நிகழ்ச்சியும் சேர்ந்து அவர்களை பொறுமை இழக்கச் செய்துள்ளது. மாணவர்களின் முக்கிய கோரிக்கைகளில் சர்வகலாசாலைகளில் இப்போதுள்ள ச

படுமோசமான நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமென்பதும் ஒன்றாகும். மேலும், போதனை வசதியும், நூல்நிலைய வசதியும், வசதியற்ற மாணவர்களுக்கு பண உதவியும், நல்ல விடுதி வசதியும், நல்ல உணவும், கல்விக்குப் பின் வேலை உத்தரவாதமும் வேண்டுமென்பது அவர்களின் கோரிக்கை.

நான்கு பல்கலைக் கழகத்திலுமுள்ள மாணவர்களுக்கு ஒரே விதமான சம உரிமை வேண்டுமென அவர்கள் கோருவதும் நியாயமானதே. தற்போது, பேராதனை முதல் தரமானதாகவும், கொழும்பு இரண்டாந் தரமாகவும், வித்தியலங்கார மூன்றுந்தரமாகவும் கருதப்படுகிறது. தேசிய உயர் கல்வி சபை அதிக புள்ளிகள் எடுத்தவர்களை பேராதனைக்கும், மற்றவர்களை முன் சொன்ன முறையில் பல்கலைக் கழகங்களுக்கும் தரம் பிரித்து அனுப்புவதிலிருந்து இது நிரூபிக்கப்படுகிறது.

பல்கலைக் கழக மாணவர்களின் இந்த பிரச்சினைகள் அனைத்தும் நியாயமானவையே. அதற்கு தொழிலாளி வர்க்கத்தினதும், சகல முற்போக்கு சக்திகளினதும் பூரண ஆதரவு இருக்க வேண்டியது அவசியம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, பல்கலைக் கழக மாணவர் மத்தியில் ஓரளவு செல்வாக்குப் பெற்றுள்ள நவீன திரிபுவாதிகளும், சமசமாஜிகளும் இன்று மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள படுமோசமான நெருக்கடிகளுக்கு ஒரு புரட்சிகர தலைமை கொடுக்கத் தயங்கி நிற்கின்றனர்.

எமது பல்வேறு ஸ்தாபனங்களின் சார்பில், பல்கலைக் கழக மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் அக் கோரிக்கைகளுக்காக அவர்கள் நடத்தும் எந்தவொரு போராட்டத்திற்கும் நாம் எமது பூரண ஆதரவைத் தருவதாக உறுதியளிக்கிறோம். திரிபுவாதிகளினதும், சீர்திருத்த வாதிகளினதும் இந்த சீர்குலைவு கோஷ்டி பூசல்களையும், செயலற்ற தன்மையையும் உதறிதள்ளிவிட்டு முன்செல்லுமாறு நாங்கள் பல்கலைக் கழக மாணவர்களை அறைகூவி அழைக்கின்றோம். ஐக்கியத்தோடும், மன உறுதியோடும் திரண்டெழுந்து, தொழிலாளி வர்க்கத்தோடும், புரட்சிகர சக்திகளோடும் ஒன்றுபட்டு போராடுவதின் மூலம் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதே வேளையில், இன்று நாட்டில் நிலவுகின்ற ஏகாதிபத்திய, நிலபிரபுத்துவ முதலாளித்துவ, சமூகத்தில் நமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும். நல்ல கல்வி வசதிக்காகவும், படிப்புக்குப் பின் வேலை உத்திரவாதத்திற்காகவும் பொருளாதார பாதுகாப்புக்காகவும் நடத்தும் தமது போராட்டத்தை வெகு ஜனங்களின் போராட்டத்தோடு, முக்கியமாக தொழிலாளி வர்க்க விவசாயி வர்க்கப் போராட்டங்களோடு இணைத்து ஏகாதிபத்தியத்தையும், நிலப் பிரபுத்துவத்தையும், யூ. என். பி. யையும் ஒழித்துக் கட்டுவதற்காக — சமுதாய, பொருளாதார அமைப்பில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகப் போராட வேண்டியது அவசியம்.

இன்று புரட்சிப் பூகம்பம் கிளம்பியுள்ள பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, மெக்சிகோ மற்றும் உலகெங்குமுள்ள வீரமிக்க மாணவர்கள் செல்லும் பாதையில் முன்னேறுமாறு நாம் எமது நாட்டு மாணவர்களை அறைகூவி அழைக்கின்றோம்,

தொழிலாளர்களினதும், விவசாயிகளினதும், மாணவர்களினதும் ஐக்கியத்தை உருவாக்குவோம்!

எமது சகாப்தத்தின் தலைசிறந்த மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டான தோழர் மாசேதுங் கூறியது போன்று "இளம் பிராயத்தினரான நீங்கள் வீறும் ஜீவ துடிப்பும் நிரம்பியவர்கள். காலை எட்டு ஒன்பது மணிக்கு உதிக்கும் சூரியனைப்போல் வாழ்வின் வசந்தத்திலுள்ளவர்கள்"

புதியதோர் உலகம் படைப்பதற்காக சகல விதமான அநியாயங்களையும், சுரண்டலையு எதிர்த்துப் போராட வேண்டியது வாலிபர்களின் கடமை.

## விவசாயிகளின் விமோசனத்திற்கு ஒரே வழி

# இன்றைய சுரண்டல் அமைப்பை தகர்க்க அவர்கள் போராடுவதே!

'நாட்டில் உணவு உற்பத்தி பெருகுகிறது—விவசாய மன்னர்களுக்கு தங்கப் பதக்கம்—விவசாய மன்னர்கள் இந்தியாவுக்குச் செல்வார்கள்—விவசாய மன்னர்கள் அடுத்த தேர்தலில் யு. என். பி. யின் சார்பில் போட்டியிடுவார்கள்—1970 ம் ஆண்டில் நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிடும்'—என்றெல்லாம் யு. என். பி. பிற்போக்கு ஆட்சியாளர்கள் வானொலியிலும், பத்திரிகைகளிலும், திரைப்படங்களிலும் புளுகுப் பிரச்சாரங்களை அவிழ்த்து விட்டு வரும் வேளையில், இன்னொரு பக்கத்தில் கடன் கட்டாத காரணத்தினால் விவசாயிகளின் கூப்பன்கள் பறித்தெடுக்கப்படுகின்றன.

அது மாத்திரமல்ல, பசளையின் விலைகள் கூட்டப்படுகின்றன; கடனுக்கான வட்டி இருமடங்காக்கப்பட்டுள்ளது; நெல் புசலுக்கு 2 ரூபா கூட என்ற பெயருடன் முந்திய நிலையிலும் 80 சதம் குறைக்கப்பட்டுள்ளது; ரூபா மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது; பங்கீட்டு அரிசியில் ஒரு கொத்து வெட்டப்பட்டுள்ளது; சிறுபோக வேளாண்மைக்கு கொடுக்கப்படும் தண்ணீர், விளைவதற்கு முன்னமே திடீர் திடீர் என நிறுத்தப்படுகின்றது; வரிகள் கூட்டப்படுகின்றன, பாவனைப் பொருட்களின் விலைகள் கூட்டப்பட்டுள்ளன; நிலமில்லா விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலங்களில் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் செய்வது வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளையான யு. என். பி.யும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளுமே.

இப் பிற்போக்கு அரசாங்கத்தின் கொடுமைகளை எதிர்த்து சகல பகுதி மக்களும்—தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இன்ஜினியர்கள், டாக்டர்கள் எல்லோருமே போராட்டம் நடத்துகிறார்கள். உண்மையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் ஆகக் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றவர்கள் இந்த நாட்டுச் சனத் தொகையில் பெரும் வீதத்தை வகிக்கும் விவசாயிகளும், தொழிலாளர்களுமே. இன்றைய நிலையில் விவசாயிகள் ஸ்தாபனரீதியாக அமைந்து போராடுவதன் அவசியம் வந்துள்ளது.

அரசாங்கம் கூப்பன்களைப் பறிமுதல் செய்வதற்கு எதிராக பலர் இன்று குரலெழுப்புகின்றனர். பொதுத் தேர்தல் நெருங்குகிறது என்ற எண்ணத்தினால் பலர் இன்று விவசாயிகளைப் பற்றிப் பேசுவதற்கு வாய் திறந்துள்ளனர். 'கூப்பனைப் பறிக்க வேண்டாம், கடனைத் திருப்பிக் கட்டுவதற்குத் தவணை கொடுங்கள், கடனைப் பகுதிபகுதியாகக் கட்டுவதற்கு வசதி செய்யுங்கள், குடும்பத்திலுள்ள அத்தனை பேர்களுடைய கூப்பன்களையும் பறிக்காமல் கடன் எடுத்தவரின் கூப்பனை மாத்திரம் பறியுங்கள்'' என்று பலர் பாராளுமன்றத்துக்குள் கூச்சல் போட ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் இவர்கள் சொல்லும் வழியில் விவசாயிகளின் பிரச்சனைகள் தீர்க்கப்படுமா என்பதுதான் கேள்வி.

உண்மையில் விவசாயிகள் எந்த விதத்திலும் அரசாங்கத்தின் கடனைத் திருப்பிக் கட்ட முடியாது. வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களிடமும், தரகர்களிடமும் ஏற்கனவே மீள முடியாத நிலையில் கடன்பட்டு அல்லலுறும் விவசாயிகளை அரசாங்கம் போக்கிரித்தனமான முறையில் ஏமாற்றப் பார்க்கின்றது. விவசாயிகளின் பயிர்கள் பிரயோசனமற்ற முறையில் அழிவதற்குக் காரணமான அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்பாளியாகும். இந்த நிலையில் அரசாங்கம் விவசாயிகளின் கூப்பன்களைப் பறிமுதல் செய்துள்ளது அரசாங்கத்தின் மக்கள் விரோத பிற்போக்குத் தன்மையையே காட்டுகின்றது.

இந்த நிலையில் விவசாயிகள் கூப்பன் பறிப்பதற்கு எதிராக மட்டுமல்லாது தங்களுக்கு எதிராகச் செய்யப்படும் சகல சுரண்டல்களுக்கும், கொடுமைகளுக்கும் எதிராகப் போராடுவதன் மூலமே விமோசனம் பெறமுடியும். அப்படியானால் விவசாயிகள் இன, மத பேதமற்ற முறையில் ஒரு புரட்சிகரத் தலைமையின் கீழ் ஸ்தாபன ரீதியாக ஐக்கியப்பட்டுப் போராடுவதே ஒரே வழி, பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்தச் சம்பளத்தைக் கூட்டுவதற்கு எப்படி, செல்வநாயகமும், பொன்னம்பலமும், டட்லியும், சிறிமாவும், பீட்டர் கெனமனும், சி. பி. டி. சில்வாவும், என். எம். பெரேராவும், பிலிப் குணவர்த்தனவும், நவரத்தினமும், ஆர். ஜி. சேனநாயக்காவும் ஐக்கியப்பட்டுக் கை உயர்த்தினார்களோ அதேபோல விவசாயிகளும் தமது பிரச்சினை

— 11-ம் பக்கம் பார்க்க

## தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்கள்: 8

# தகரம் பிள்ளையார் கோவில் திருவிழா நிறுத்தப்பட்டதேன்

மனித உரிமைகளில் ஒன்ருன ஆலயப் பிரவேச உரிமை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டது இன்று நேற்று நடந்ததொன்றல்ல. இதை மறுக்கும் உரிமை யாருக்கும் இல்லையென்ற போதிலும் பன்னெடுங் காலமாக ''உயர்சாதியினர்'' தமது ஆதிக்க வெறியின் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களின் பொறுப்பிலிருந்த சில கோயில்களையும் தமது ஆதிக்கத்துள் உட்படுத்திக் கொண்டனர். அவ்வாறு முடியாத பட்சத்தில் அவர்களுக்குள் பிரிவினையை வளரச் செய்து தாழ்த்தப்பட்ட மக்களின் ''ஆண்டவனை'' பிரபல்யமில்லாது செய்ததோடு தமது ''கடவுளர்களை'' பிரபல்யப் படுத்திக் கொண்டனர். கோயிலுக்குள் புகுவதை தடை செய்த போதும் திருவிழா நடத்துதல், திருப்பணி வேலைகள் செய்தல், ஆலயங்கள் அமைத்தல், புதுப் பந்தல், தேர் கட்டுதல் போன்ற பணச் செலவுள்ள விஷயங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் விரும்பாத போது கூட அவர்களைப் பலவந்தப் படுத்தி தம்முடன் இணைத்துக் கொண்டனர்.

### கடவுளின் பெயரால் சுரண்டல்

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அன்றும் இன்றும் கோயில்கள் மிகவும் பிரபல்யம் வாய்ந்த வியாபார கேந்திரங்களாகவிளங்கி வருகின்றன. கோயில்களைப் பொறுத்த வரையில் அடுத்த மணியகாரன் யார் என்பதிலும் பங்குதாரர்களுக்கிடையில் ஏற்படும் பாகப் பிரிவினைகளிலும் இருந்து எவ்வாறு உயர் வர்க்கம் தமது சொந்தச் சொத்தாகக் கோயில்களைப் பாவிக்கின்றதென்பதையும், அதிலிருந்து கிடைக்கின்ற பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமானமுள்ள வருமானத்திற்காக எவ்வாறு வெறி நாய்ச் சண்டை போடுகின்றனர் என்பதையும் தெரிந்து கொள்ள முடியும். மேலும் கடவுளின் பெயரால் சுரண்டுவது சுலபம். சாதாரண கல்வியறிவற்ற பாமர மக்கள் தமக்கு உரிமை கிடையாத போதும் கூட ஆண்டவனுக்கு தொண்டு செய்யவும், ஆண்டவன் பெயரால் தமக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை ஏற்றுக் கொள்ளவும் சமயம் அவர்களை மாற்றியுள்ளது. எனவே கடவுளின் பெயரால் சுரண்டுவது சுலபமாக இருந்தது. ''அம்மிக்கும் நோகாமல் குழவிக்கும் நோகாமல்'' என்ற மாதிரி நேரடியாக எங்களுக்குப் பணம் தா என்று கேட்காமல் ஆண்டவனுக்கு அது செய்கிறோம், இது செய்கிறோம் என்று சொல்லி பணம் சேர்க்க முடிந்தது.

இச் சுரண்டல் பல்வேறு காலங்களில், பல்வேறு, ரூபங்களில் நடந்த போதும் அடிப்படையில் ஒன்ருகவே இருந்தது. உதாரணமாக பல கோயில்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று பல திருவிழாக்கள் ஒதுக்கப்பட்டு இருந்தன. இத் திருவிழாக்களின் போது திருவிழாச் செலவை விட உபயகாரர் கோயில் அபிஷேகச் செலவுக்கென்று ஒரு தொகையும், கோயிலுக்கென்று இன்னொரு தொகையும் கையளிக்க வேண்டி இருந்தது. இத் தொகை பெரும்பாலும் ஆண்டவனின் தரத்திற் கேற்றவாறு நூறிலிருந்து பல ஆயிரம் வரை இருக்கும். ஆனல் ஆண்டவனுக்காகச் செலவழிப்பது ஒரு சில நூறு சதங்கள் மட்டுமே. திருப்பணிக் காலங்களில் அக் கோயிலின் திருவிழா உபயகாரர்கள் அனைவரும் குறிப்பிட்ட பங்கு தொகையைச் செலுத்த வேண்டும். இல்லா விட்டால் திருவிழாச் செய்ய விடமாட்டோம் என்று வெருட்டுவார்கள். இவ்வாறு வாங்கும் எந்தப் பணத்துக்கும் பற்றுச்சீட்டு கொடுத்ததாக எந்த ஒரு கோயிலின் வரலாற்றிலும் இல்லை. அதனுல் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் கொடுக்கும் பங்குத் தொகையைக் கொண்டு தமது பங்குகளையும் (ஏன் தமது தொந்திகளையும் கூட) வெகு ''கெட்டித்தனமாக'' சரிக்கட்டி விடுவார்கள். ஆனல் இவையெல்லாவற்றிலும் முக்கியம் என்னவென்ருல், தமது இரத்தத்தை வியர்வையாக்கி அவ் வியர்வையில் தோய்ந்து நாற்றம் பிடித்த பணம் ஆண்டவனின் திருமேனியையடைந்து பவிசு பெறலாமாம். ஆனல் அதற்கு மூலகர்த்தாவான அத் தூயவன் ஆண்டவனை அடைய முடியாதாம். காரணம் வியர்வை அழுக்குப் படிந்த பணம் அஃறிணைப் பொருள்; சாதியற்றது; வர்க்கமற்றது. அழுக்கு நிறைந்ததானுலும் அது ஆண்டவன் சந்நிதியை அடைந்தால் ஆண்டவனையே பரிசுத்தமாக்கி விடுமாம். ஆனல் ஆறறிவு படைத்த மனிதன் சென்ருலோ ஆண்டவனுடைய புனித ஸ்தலமல்ல, ஆண்டவனே அசுத்தப்பட்டு விடுவானும். கேவலம் கலையைக் கொலை பண்ணும் ''சின்ன மேளக்காரர்'' எனக் கூறப்படுவோர் கூட்டம் கள்ளும் இறைச்சியும் சாப்பிட்டு விட்டு கொடி மரத்தடியிலல்ல, அர்த்த மண்டபத்துக்குள்ளேயே நின்று நர்த்தனமாடலாமாம். கள்ளு வெடில் ஒரு புறமிருக்க, நாற்றமெடுத்த கந்தைத் துணியுடன் நின்று புரோகித வர்க்கம் ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்யலாமாம், தாசி வீடு போய் வந்தவர் பக்தியாக ஆலவட்டம் பிடிக்கலாமாம். (இதை ஆறுமுக நாவலரே கூறுகின்ருர்) ஆனல் தூய மனம் படைத்த ஏழை ஏன் ''ஆண்டவனை''த் தரிசிக்க முடியாது? இது சுரண்டல் அல்லாமல் வேறென்ன?

இது மாத்திரமல். பணம் கொடுத்தவர்கள், பணத்தைச் செலவழிப்பவர்கள் தம்மனப்படி எதுவும் செய்ய முடியாது. தமக்குப் பிடித்தமான முறையில் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்த உயர் சாதியினர் அனுமதிப்பதில்லை. தமது திருவிழாவின் போது கூட எந்த ஒரு நிகழ்ச்சியையும் சிறப்பாக கண்டுகளிக்க அனுமதிக்கப் படுவதில்லை. ஏதோ அநாதைகள் போல் கயிறுகட்டி, மரங்கள் போட்டு சிறைக்குள் அடைத்த மாதிரி அடைத்து வைக்கிருர்கள். இதற்கும் கட்டுப் படாமல் போய்விடுமோ என்ற பயத்தால் டசின் கணக்கில் பொலிசுகளும் வரவழைக்கப் படுவார்கள். இதிலிருந்து நன்ருகத் தெரியும் உயர் வர்க்கத்துக்குத் தேவை பணமேயன்றி தாழ்த்தப்பட்ட மக்களல்ல என்று.

### மக்களைத் தரம் பிரித்த கயிறு அறுக்கப் பட்டது

புத்தூர் கிராமத்தில் வாதுரவத்தைக்கும் ஓடை என்ற சிறு கிராமத்துக்கும் இடையே தகரம் பிள்ளையார் கோவில் ஒன்று அமைந்திருக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன் அங்கு சிறப்பாக பத்து திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. 7—ம் 8—ம் திருவிழாக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுடையவை. இது எல்லாவற்றையும் விட சிறப்பாக செய்யப்பட்டு வந்தன. ஆனல் இந்தத் திருவிழாக்களை பார்ப்பதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கயிற்ருல் எல்லைக்கோடு விதிக்கப் பட்டது. (உலகில் எங்கும் கயிற்ருல் மக்களை தரம் பிரித்ததாகக் கேள்விப் பட்டதில்லை. இந்த உயர் சாதி வெறியர் சமூகத்தைத் தவிர) அவர்கள் இந்த எல்லைக்கு வெளியே இருந்துதான் பார்க்க வேண்டும். எல்லையைத் தாண்டி உள்ளே போகாமலிருக்க குண்டர்களாலும் பொலிசுகளாலும் ஆன படை ஒன்று எந்நேரமும் காவல் புரியும். இதற்கெதிரான எதிர்ப்புணர்ச்சி நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. இப்போது அது வெடிக்கும் நிலை தோன்றியதால் ஆத்திரம் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களால் கயிறு வெட்டப்பட்டது. உள் நுழைந்தார்கள். ஆனல்தயார் நிலையிலிருந்த மரக்குத்திகள் இரு சாராருக்கும் இடையே போடப்பட்டன, ஆயினும் உத்வேகம் கொண்ட அம்மக்களை மரக்குத்திகளாலோ குண்டர்களாலோ ஒன்றும் செய்ய முடியவில்லை. பெருத்த கலகம் ஏற்பட்டது. ஈற்றில் சேதங்களுடன் திருவிழாவே நிறுத்தப் பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் தாம் செய்தது சரியென வாதிட்டனர்; தமது உரிமை கிடைக்கும் வரை திருவிழாவோ, ஆலயச் செலவுகளோ கொடுக்க முடியாது என்றனர். உயர்சாதி வெறியர்கள் அதை ஏற்றுக் கொள்ளாது திருவிழாச் செய்வதையே கைவிட்டனர். மற்றவர்களும் திருவிழாச் செய்ய முன் வரவில்லை. இன்றுவரை அங்கு எந்த விதத் திருவிழாவும் நடைபெற்றதில்லை. இன்று அங்கு உயர்சாதி வெறியர்களையும் ''ஆண்டவனை''யும் ஆமைப்பூட்டு காவல் செய்கிறது.

## அந்த நாளின் வரவுக்காய் ஆர்வமுடன் பாடுகிறேம்

— ராதை —

அந்த நாளின் வரவுக்காய்
ஆர்வமுடனே பாடுகிறேம்

சிந்தூர ஒளிப் பிழம்பாய்
செவ்வானம் தீட்டுகின்ற
கதிரவனின் வரவுக்காய்
காரிருளை ஊடறுத்து
கொக்கரித்துக் கூவுகிற
கோழிச் சேவல்களாய்;
அந்த நாளின் வரவுக்காய்
ஆர்வமுடனே பாடுகிறேம்.

எந்த நாளிலே இடர்கள்
மனித ஙிதயம் தொடாது போகுமோ;
எந்த நாளிலே ஏற்றத் தாழ்வெனும்
இருள்கள் நீங்கியே ஓடுமோ;
எந்த நாளிலே இங்கு எம்முடை
இதயக் கனவுகள் பூக்குமோ;
அந்த நாளின் வரவுக்காய்
ஆர்வமுடனே பாடுகிறேம்.

வெந்து மனங் கருகி
வேதனையில் உயிர் சுருங்கி;
நொந்து: நெடு மூச்சில்
நிம்மதியைத் தேடுகின்ற
இந்தத் துயர் வாழ்வு
என்றே ஒழிந்து விடும்
என்ற பெருந் துணிவில்
இதயத்தை நாவாக்கி;
அந்த நாளின் வரவுக்காய்
ஆர்வமுடனே பாடுகிறேம்.

சாதி சமயங்கள்
தத்துவங்கள் என்றெல்லாம்
ஓதி; உலகத்தின்
உண்மை நிலையினையும்
நீதியையும் பொய்மை
நிறையிருளில் மூடுகிற
பேதை நிலை மாறும்
பெருநாள் வருமென்று;
அந்த நாளின் வரவுக்காய்
ஆர்வமுடனே பாடுகிறேம்.

இதயத்தின் விருப்பையெல்லாம்
இரத்தத்தாற் பாட்டெழுதி
புது யுகத்தின் வரவுக்காய்
பொங்கலிட்டுப் பாடுகிறேம்
உதயத்தின் பிறப்புக்காய்
ஓயாது பாடுகிறேம்
உதயத்தின் தோற்றத்தில்
ஒளிகள் நிரம்புகிற;
அந்த நாளின் வரவுக்காய்
ஆர்வமுடனே பாடுகிறேம்.

◎ 10-ம் பக்கத் தொடர் களைத் தீர்ப்பதற்கு தமிழன், சிங்களவன், முஸ்லிம் என்ற பேதமின்றி ஐக்கியப்படவேண்டும்.

பெரும் பெரும் முதலாளிகளாகவும், பணக்கார முதலைகளுமாக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களோ, அல்லது அந்தக் கள்ளர்களின் குகை என வர்ணிக்கப்பட்டுள்ள பாராளுமன்றமோ விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பது ஒநாயிடம் ஆட்டுக்குட்டியைப் பாதுகாப்புக்கு விடுவது போலாகும். 'விவசாயிகளின் தலைகளில் மலையாக அழுத்திக்கொண்டு இருக்கும் பிரச்சினைகளை தூக்கி வீசுவதற்கு அவர்களின் சொந்தக் கைகளால் தான் முடியும்!

கோடிக்கணக்கான சீன விவசாயிகள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்தப் பாதையில் சென்ருர்களோ, இந்தியாவில் நக்ஸல்பாரிப் பிரதேசத்திலும் ஏனைய பகுதிகளிலும் விவசாயிகள் எந்தப் பாதையில் செல்கிருர்களோ, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க விவசாயிகளும், தொழிலாளர்களும் மற்றும் அடக்கப்பட்டுள்ள மக்களும் எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளார்களோ அதே பாதைதான் இலங்கை விவசாயிகளுக்கும் விமோசனமளிக்கும் பாதை, உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் உன்னத தலைவர் கூறிய, ''அடக்கப்பட்ட தேசங்களும் மக்களும் தமது விடுதலைக்கான பாதையை ஏகாதிபத்தியவாதிகளின்மீதும் அவர்களின் ஏவல் நாய்கள் மீதும் வைக்கக் கூடாது. மாருகத் தமக்குள் ஐக்கியத்தை வளர்த்து, போராட்டத்தில் விடாப்பிடியாக நிற்பதன் மூலமே தமது போராட்டத்தில் வெற்றிபெற முடியும்'' என்ற சிறந்த அறிவுரையில் தங்கி நிற்பதன் மூலமே ஈழத்து விவசாயிகளும் தமது போராட்டத்தில் வெற்றிபெற முடியும்.

# அரசாங்க ஊழியர் நடத்த இருக்கும்

# வேலைநிறுத்தத்திற்கு எமது பூரண

# ஆதரவு உண்டு

◎ 1-ம் பக்கத் தொடர்

அடக்குமுறை பற்றி தொழிலாளர்களைப் பயமுறுத்தி குறுகிய காலத்தில் வேலைநிறுத்தங்களை காட்டிக் கொடுத்தனர். இவர்கள் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் இரகசியமாக நடத்தி அதிகாரிகளின் நிபந்தனைகளுக்கிணங்க வேலைநிறுத்தத்தை தீர்த்து வைக்கின்றனர். துறைமுகத்திலும், இ. போ. ச. விலும் நடந்தது இதுதான். இப்பேர்ப்பட்ட துரோகத்தனமான நடவடிக்கைகளில் இன்றைய போராட்டத்தை சீர்குலைத்து தொழிலாளர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிப்பதோடல்லாது இத் தொழிலாளர்களை வருங்காலத்தில் போராட்டத்தில் பங்குகொள்ளச் செய்வதையும் கஷ்டமானதாக ஆக்குகின்றனர்.

மாணவர் போராட்டங்களிலும் இதே நிலைமையை நாம் காணலாம். மாணவர்கள் ஏராளமான நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தனர். அதிகாரிகள் இக் கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனிக்க மறுத்தது மட்டுமல்லாது, என்றுமில்லாத அடக்குமுறைகளில் ஈடுபட்டனர். எமது நாட்டின் சரித்திரத்தில் முதல் தடவையாக பல்கலைக் கழக அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு றிமாண்ட் சிறையில் வைக்கப்பட்டனர். தமது கோரிக்கைகளை வெளிப்படுத்துவதற்காக உண்ணாவிரதப் போராட்டம் இருந்ததுதான் மாணவர்கள் செய்த ஒரே ''குற்றம்.'' ஆனல் சம சமாஜ சார்பு மாணவர்களுக்கும், திரிபுவாத சார்பு மாணவர்களுக்குமிடையிலான கோஷ்டி பூசல்கள் காரணமாக பலமான எதிர்ப்பு எதையும் காட்ட முடியவில்லை. இவ்விரு கட்சிகளின் தலைவர்கள் தாம் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ள பாராளுமன்றத்தில் கூட இக் கொடுமை பற்றி ஒரு பிரச்சினையையும் கிளப்பவில்லை.

## கிளர்ச்சி வெடிக்கும் சூழ்நிலை

தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களின்போதும் சரி, மாணவர்களின் கிளர்ச்சியின் போதும் சரி வேலை நிறுத்தம் செய்தவர்களுக்காக நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்ததும், மாணவர்களின் மீதுள்ள அடக்கு முறைக்கு எதிராக குரல் எழுப்பியதுமான ஒரே மத்திய ஸ்தாபனம், எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும், செங்கொடி வாலிபர் சங்க சம்மேளனமுமேயாகும். 1966 ஜனவரி 8-ம் திகதி வேலை நிறுத்தத்தின்பின் அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட படுமோசமான அடக்குமுறையின் காரணமாக தொழிலாளி வர்க்கத்தைச் சூழ்ந்திருந்த பயத்தையும், உணர்வின்மையும் 1966 ல் சி. டி. யு. எப். நடத்திய வேலைநிறுத்தங்கள்தான் இல்லாமல் செய்தன என்பதை நினைவுபடுத்துவதில் நாம் பெருமையடைகின்றோம். இப் போராட்டங்கள்தான் தொழிலாளர்களுக்கு புதிய உத்வேகத்தை அளித்தன. அடுத்த வருடம் நடந்த போராட்டங்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தின.

இன்று நாட்டில் கிளர்ச்சி வெடிக்கும் சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. தொழிலாளர்களும் வாலிபர்களும் அடிதாங்க முடியாது துடித்தெழுகின்றனர். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு காரணமாக வருவாய்க்குத் தக்க வாழ்வு நடத்த முடியாதிருக்கின்றனர். 1965—66 ஆண்டில் உணவுப் பற்றுக்குறை காரணமாக 2000 பேர் உயிரிழந்ததாக சுகாதார திணைக்களம் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது. அதற்குப் பின்னும், சுகாதார திணைக்களகத்திற்கு தெரியாமலும் இன்னும் எத்தனை பேர் மாண்டார்களோ!

## தொழிலாளர்களுக்கும் வாலிபர்களுக்கும் உணர்த்த வேண்டிய ஒரு விஷயம்

சீர்கெட்டு வரும் பொருளாதார நிலைமைகளும், சொல்லொணாத உயர்ந்த வாழ்க்கைச் செலவும்தான் தொழிலாளர்கள், விவசாயிகள், வாலிபர்கள், மாணவர்கள் ஆகியோர் மத்தியில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிக்குக் காரணம். இந்த இயக்கம் ஒன்றுபடுத்தப்பட வேண்டும்; அதற்குப் புரட்சிகர தலைமை அளிக்கப்படல் வேண்டும். வழக்கம் போலான, இயல்பான பொருளாதாரப் போராட்டங்களோடு நில்லாது உயர்மட்ட அரசியல் போராட்டங்களாக மாறி வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யூ. என். பி. போன்ற அதன் அடிவருடிகள் யாவற்றையும் இறுதியாக ஒழித்துக்கட்டுவதற்கான நோக்கத்துடன் அணி திரட்டப்பட வேண்டும்.

தொழிலாளர்களும் வாலிபர்களும் தமது போராட்டங்களை பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக இன்றுள்ள ஏகாதிபத்திய—முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் கீழ் தமது நிலைமையை சீர்படுத்திக் கொள்வதற்கான போராட்டத்துடன் நிறுத்திக்கொண்டால் இன்றைய சுரண்டலைத் தொடர்ந்து அனுமதிப்பதாகத்தான் இருக்கும் என்பதை தொழிலாளர்களுக்கும், வாலிபர்களுக்கும் நாம் உணர்த்த வேண்டும். ஏகாதிபத்திய சுரண்டலின் விளைவுகளை எதிர்த்துப் போராடும் அதே வேளையில், அவர்கள் ஏகாதிபத்திய சுரண்டல் அமைப்பையே தகர்த்தெறியப் போராட முன்வரவேண்டும்.

இதற்காக நாம், தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள், மற்றும் முற்போக்கு சக்திகள் ஆகியவற்றின் புரட்சிகர ஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டும். இவர்கள் மார்க்சிஸ—லெனினிஸ மா சே-துங் சிந்தனை என்ற புரட்சிகரக் கொள்கையை தமதாக்கிக் கொள்ளவேண்டும்.

இதனை சமசமாஜத் தலைவர்களுக்கும், கெனமன் திரிபுவாதக் கும்பலுக்கும் எதிராக நின்றுதான் செய்யமுடியும். இவர்கள் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஓர் தடையாக—இடையூருக ஆகியுள்ளனர். அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைக் கொண்டவர்களாக இல்லை. தமது பாராளுமன்ற ஆசனங்களில் மட்டுமே அவர்கள் அக்கறை கொண்டுள்ளனர். தொழிலாளர்களில் முதுகுகளில் ஏறி மந்திரிப் பதவிகளைப் பெறத்தான் காத்திருக்கின்றனர். வேலை நிறுத்த நிலைமை வளர்ந்து வந்த போதிலும், கூட்டணிக் கட்சிகளின் தொழிற் சங்கத் தலைவர்கள் அவர்களது பெரிதும் தம்பட்டமடிக்கும் தொழிற் சங்க ஸ்தாபனங்களின் கூட்டுக் கமிட்டியினுள் உள்ள முரண்பாடுகள் காரணமாக ஒரு தடவையேனும் கூடவில்லை என்பதிலிருந்து இவர்களின் உண்மையான நிலையை அறிந்துகொள்ளலாம். வேலை நிறுத்தங்கள் பற்றி கூட்டணிக் கட்சிகளில் ஒன்றுவது ஒரு அறிக்கையைக் கூட வெளியிடவில்லை.

## ஒன்றுபட அழைக்கின்றோம்.

இப்படிப்பட்டவர்களிடம் தொழிலாளர்கள் உண்மையான தலைமையை எதிர்பார்க்க முடியுமா? இதற்கு மாற்று மருந்துதான் என்ன? தொழிலாளர்கள் அடிமட்டத்தில் இருந்து தம்மிடையே ஒரு தலைமையை வெளிக் கொணர வேண்டும். பிரான்சில் இவ்வருடம் மே மாதத்தில் உத்தியோகபூர்வமான தொழிற் சங்கத் தலைவர்களின் ஆசீர்வாதமின்றி அணிதிரளாத லட்சக்கணக்கான தொழிலாளர்களை போராட்டத்தில் குதிக்கச் செய்த பிரஞ்சுத் தொழிலாளர்களை உதாரணமாகக் கொள்ள வேண்டும். ஆனல், இலங்கையில், சரியான புரட்சிகரத் தலைமையை கொடுத்துள்ள மார்க்சிஸ—லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது. தொழிலாளர்களை போராட்டத்தில் வழி நடத்திச் செல்ல எமது பலம் வாய்ந்த இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் இருக்கிறது. தொழிலாளர்கள் இந்த புரட்சிகர ஸ்தாபனங்களின் கீழ் தம்மை மறுபடியும் அணிதிரட்டி, அடிப்படை ஸ்தாபனங்கள் அமைத்து, பழைய சீர்திருத்தவாத-திரிபுவாத தலைமையை நிராகரிப்போம் என்ற தீர்க்கமான முடிவை எடுத்து புதிய புரட்சிகர வருங்காலத்தை எதிர்நோக்கி முன்னேற வேண்டும்.

அரசாங்கத் துறை தொழிலாளர்களையும், தனியார் துறைத் தொழிலாளர்களையும் ஒன்றுபடும்படி அழைக்கின்றோம். தொழிலாளர்களையும் விகிதர்களையும் ஒன்றுபடும்படி அழைக்கின்றோம், நகர்ப்புறத் தொழிலாளர்களையும் தோட்டத் தொழிலாளர்களையும் ஒன்றுபடும்படி அழைக்கின்றோம். தொழிலாளர்களும், விவசாயிகளும், புரட்சிகர புத்திஜீவிகளும் ஒன்றுபடும்படி அழைக்கின்றோம். எமது யாவரினதும் எதிரி ஒருவனே; எமது கோரிக்கைகள் யாவும் பொதுவானவை. ஆதலால் ஒன்றுபடுவோம்; போராடத் துணிவோம்.

அரசாங்க ஊழியர்கள் நடத்த இருக்கும் வேலைநிறுத்தத்திற்கு எமது பூரண ஆதரவு உண்டு என்பதை தொழிலாளி வர்க்கத்தின் சகல பகுதியினருக்கும் தொழிற் சங்க இயக்கத்திற்கும் தெரியப்படுத்துகின்றோம்.

**தொழிலாளர், விவசாயிகள் புரட்சிகர புத்திஜீவிகள் ஆகியோரின் புரட்சிகர ஒற்றுமை ஓங்குக!**

---

◎ 2-ம் பக்கத் தொடர்

என்றும் வர்ணித்த பால தம்பு தனது கைகுண்டு வெடிக்காத ஒன்று என்பதை மறந்து விட்டார் போலும்.

கடந்த மாதம் தண்ணீர்ப் பிரச்சினையைக் காட்டி, பரந்தன் தொழிற்சாலை நிர்வாகம் தற்காலிக ஊழியரைத் திடீரென வேலை நீக்கம் செய்தது. (இதனைக் கண்டித்து தொழிலாளியில் செய்தி வந்ததும் வாசகருக்கு நினைவிருக்கலாம்) நிர்வாகத்தின் இந்த அநியாயத்தைக் கண்டித்துக் குரல் எழுப்பியது, ''சீனவெடி'' என்று பாலாதம்பு வர்ணித்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துடன் இணைந்துள்ள ஐக்கிய இரசாயன ஊழியர் சங்கம்தான். அது கண்டனக் குரல் எழுப்பியதோடு மட்டும் நின்றுவிடவில்லை. இந்தப் பிரச்சினையை கைத்தொழில் மந்திரிக்கும், மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் அறிவித்து நடவடிக்கை எடுத்து, வேலைநீக்கம் செய்யப்பட்ட தற்காலிக ஊழியருக்குத் திரும்பவும் வேலைக்கு வர ஒழுங்கு செய்தது என்பது பாலா தம்புவுக்குத் தெரியாமலிருக்க முடியாது.

அதே சமயம், பாலாதம்புவின் சி. எம். யூ. கூட்டத்தில் வேலைநீக்கம் சம்பந்தமாக கண்டனப் பிரேரணை ஒன்று வந்து அதற்கு ஆதரவில்லாத நிலையில் அநாதரவாய் கைவிடப்பட்டதும் எமக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, சி. எம். யூ. ஆதரவாளர் சிலர் இந்த விஷயத்தையொட்டி கையெழுத்து வேட்டையாடி பண்டிதர் இரத்தினத்தின் மூலம் அனுப்பினர்கள் என்றும் தெரியவருகிறது. இதில் கையெழுத்திட்டவர்களில் பெரும்பாலானோர் உணர்வு கொண்ட உடல் உழைப்பாளர்கள் என்பதும, அதே வேளையில் சிரேஷ்ட சி. எம். யூ. அங்கத்தவர்கள் கையெழுத்திட மறுத்ததும் பகிரங்க ரகசியம்.

இப்படி வெட்கக் கேடாக நடந்து கொண்ட சி. எம். யூ. ஒரு கைக்குண்டல்ல, அது ஒரு வைக்கோல் குண்டு என்பதை பரந்தன் தொழிலாளர்கள் நன்கு உணர்ந்து கொண்டனர். அவர்களை பாலா தம்பு தனது வார்த்தை ஜாலத்தால் ஏமாற்ற முடியாது.

ஆனல் பாலா தம்பு, ''மா சே-துங் சின்னம் அணிந்தவர்கள் நிர்வாகத்திற்குப் பந்தம் பிடிப்பவர்கள்'' என்று உளறியிருக்கிறார். படு காவாலித்தனமான, கோழைத்தனமான, படு கேவலமான பச்சைப் பொய்யான இந்த வார்த்தைகளின் மூலம் அமெரிக்கப் புகழ் பாலா தம்பு தோழர் மா சே-துங் கூறியது போல் ''கல்லைத் தூக்கித் தன் காலில் போடும்'' முழு முட்டாளாகி விட்டார்.

அது மட்டுமல்ல, பாலா தம்பு, இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த யூனியன்கள் அரசியலை முதன்மைப் படுத்துவதாகக் குறை கூறினர். தனக்குச் சாதகமாயிருக்கும் என்று பாலா தம்பு கூறிய இந்த உண்மையைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்; பெருமைப் படுகின்றோம்.

தொழிலாளர் அரசியல் படிப்பதை தொழிற் சங்க வியாபாரம் நடத்தும் பாலா தம்பு விரும்பாததில் ஆச்சர்யமொன்றுமில்லை. அவர் தொழிலாளரை ஏமாற்றுவதற்காக உதட்டளவில் சோஷலிஸத்தை உச்சரிக்கின்றாரே தவிர, உண்மையில் இன்றைய சுரண்டும் வர்க்க சமூக அமைப்பைக் கட்டிக் காக்கவே விரும்புகிறார். தொழிலாளர்கள் அரசியல் போதமும், வர்க்க போதமும் பெற்று விட்டால் பாலா தம்பு கட்டிக் காக்க விரும்பும் இந்தச் சமூக அமைப்பையும், முதலாளித்துவ அரசையும் தகர்த்து விடுவர்; தம்மைப் போன்ற போலி சோஷலிஸ்டுகளையும், தொழிற் சங்க வியாபாரிகளையும் தூக்கியெறிந்து விடுவர் என்பது பாலா தம்புவுக்கு நன்கு தெரியும். ஆதலால் தான் அவர் தொழிலாளர் அரசியல் படிப்பதை விரும்பவில்லை; இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், இ. தொ. ச. ச. வும் தொழிலாளர்களுக்கு அரசியல் போதம் அளிப்பதை எதிர்க்கிறார்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2